Registerd as a News Paper    பக்கங்கள் 06    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆனி 15    [29-06-93]    செவ்வாய்க்கிழமை    ஓசை 131

## ஒவ்வொரு ரூபாவிலும் 20சதம் தேசிய பாதுகாப்பிற்கு செலவு

இப்போது ஒவ்வொரு ரூபாவில் இருந்தும் இருபது சதம் தேசிய பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட வேண்டியுள்ளது. ஆகையால் தொடரும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவோம் என்று தேயிலை வர்த்தகர் சங்கத் தலைவர் மைக்கல் டி சொய்ஸா தெரிவித்தார். கடந்தஞாயிறு இரவு கொழும்பு ஹோட்டல் ஹில்டனில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருப்பதற்கு வரவேற்புத் தெரிவிப்பதாகவும், இலங்கையில் தொடர்ந்து மனித உயிர்கள் அழிவது புதிய கைத்தொழில் மயமாக்கும் இலக்கை நோக்கிச் செல்வதை தாமதப்படுத்திவிடும் என்றும் தெரிவித்தார்.

# புதிய நிபந்தனை எதையும் விதிக்கவில்லை: மக்களின் தேவைகளையே அறிவித்தோம்

## அரசாங்கத்தின் குற்றச்சாட்டிற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

"போர்க் கைதிகளை விடுதலைசெய்வது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கம் புதிய நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை. அரசுடன் ஏற்கனவே ஏற்பட்ட உடன்பாட்டிற்கு அமைய வடபகுதி மக்களின் ஒரு மாத தேவைகள் அடங்கிய பொருள்களின் பட்டியல் ஒன்றையே நாம் அனுப்பிவைத்தோம். அதுவும் அரச திணைக்களங்களின் மூலமாகவே இந்தத் தேவைப்பட்டியல் தயார்செய்யப்பட்டது".

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வமான பேச்சாளர் கூறினார். கைதிகள் விடுதலைக்கு விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனைகள் விதித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்த குற்றச்சாட்டையும் அவர் மறுத்தார்.

"தடைநீங்கிய பொருள்கள் சம்பந்தமாக வடபகுதி மக்களின்தேவைகளைஒருகுறிப்பிட்டளவிலாவது பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இந்தப் பொருள்கள் வடபகுதி வந்தடையும் பட்சத்தில்போர் கைதிகளைவிடுதலை செய்வதாகவும் விடுதலைப்புலிகள் இயக்கம்அறிவித்திருந்தது. இதுபற்றி ஜனாதிபதியின் பிரதிநிதியாக இங்கு வந்த பிரிகேடியர் வீரசேகராவிடம் புலிகளின் பிரதிநிதிகள் தெளிவாக எடுத்து விளக்கியிருந்தனர். மக்களின் தேவை அடங்கிய பொருள்களின் பட்டியல் ஒன்றையும் திணைக்களங்கள் ஊடாகப் பெற்று யாழ். அரசாங்க அதிபர் மூலம் புலிகள் பிரிகேடியரிடம் சமர்ப்பித்திருந்தனர். இந்தப் பொருள்களின் குறிப்பிட்ட அளவாவது வடபகுதிக்கு வந்து சேர்ந்ததும் கைதிகளை விடுதலை செய்வதாக புலிகள் உறுதியளித்திருந்தனர். இந்த யோசனைக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தது.

ஆயினும் பொருள்கள் இங்கு வந்து சேருவதற்கு முன்னதாக கைதிகளை விடுதலை செய்யுமாறு அரசாங்கம் பிரிகேடியர் மூலம் கோரியது. ஆனால், பொருள்கள் ஓரளவேனும் வந்து சேரும் பட்சத்தில் தான் கைதிகளை விடுதலை செய்ய முடியுமென விடுதலைப்புலிகள் பிரிகேடியருக்கு எடுத்துக்கூறியதுடன், பொருள்களை

## புதிய நிபந்தனைவிதிப்பதாக புலிகள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

33 பொலிசாரையும் இராணுவச்சிப்பாய் ஒருவரையும் [illegible]

எடுத்துச் செல்லப்படும் வேளை விடுதலைப் புலிகள் புதிய கோரிக்கைகளை விடுத் [illegible]

வானொலி குறிப்பிட்டது.

கடந்த வார இறுதியில் தாம் யாழ்ப்பாணம் செல்ல [illegible]

## தலைவர் பிரபாகரனுடன் நேரடியாக பேசவேண்டுமாம்

### ரணில் தெரிவிப்பு

[டில்லி]

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான நீடித்த தீர்வைக் காணும்முயற்சியில்விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரடிப் பேச்சு நடத்த முன்வரவேண்டும் என்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுடில்லியில் இலங்கைக்கான தூதுவர் நெவில் கனகரட்ணா அளித்த தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதிலேயே ஆர்வம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

நேரடிப் பேச்சுவார்த்தை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் விடுத்துள்ள அழைப்பை புலிகள் நிராகரித்து வருவது குறித்து வருத்தம் தெரிவித்த அவர்,

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. அதிகாரிகள் இன்று யாழ். வருவர்

### புலிகளுடன் பேசுவர்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பாதையூடாக உணவு வாகனங்களை அனுப்புவது தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் இருவர் இன்று யாழ். வரவுள்ளனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் தெரிவித்துள் [illegible]

## கிளாலி கடற்பரப்பில் துப்பாக்கி சூட்டுச் சத்தம்

(தென்மராட்சி)

அல்லிப்பளை, கிளாலி கடல் கரைகளை நோக்கி பூநகரி சிறீலங்கா இராணுவத்தினர் நேற்று மாலை 5 மணியளவில் எறிகணைத் தாக்குதல்களை நடத்தினர்.

பூநகரி முகாமில் இருந்து 3 எறிகணைகள் அல்லிப் [illegible] வந்து விழுந்தன. எனினும் சேதவிபரம் தெரியவில்லை. பின்பு 6-30 மணியளவில் கடல் பிரதேசத்திலிருந்து துப்பாக்கி வேட்டுகள் தொடர்ச்சியாக 15 நிமிடம் வரை கேட்டன.

இதேவேளை இயக்கச்சி, [illegible]

ஏதையும் விதிக்கவில்லை. அரசுடன் ஏற்கனவே ஏற்பட்ட உடன்பாட்டிற்கு அமைய வடபகுதி மக்களின் ஒரு மாத தேவைகள் அடங்கிய பொருள்களின் பட்டியல் ஒன்றையே நாம் அனுப்பிவைத்தோம். அதுவும் அரச திணைக்களங்களின் மூலமாகவே இந்தத் தேவைப்பட்டியல் தயாரிக்கப்பட்டது".

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வமான பேச்சாளர் கூறினார். கைதிகள் விடுதலைக்கு விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனைகள் விதித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்த குற்றச்சாட்டையும் அவர் மறுத்தார்.

"தடைநீங்கிய பொருள்கள் சம்பந்தமாக வடபகுதி மக்களின்தேவைகளைஒருகுறிப்பிட்டளவிலாவது பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இந்தப் பொருள்கள் வடபகுதி வந்தடையும் பட்சத்தில்போர் கைதிகளைவிடுதலை செய்வதாகவும் விடுதலைப்புலிகள் இயக்கம்அறிவித்திருந்தது. இதுபற்றி ஜனாதிபதியின் பிரதிநிதியாக இங்கு வந்த பிரிகேடியர் வீரசேகராவிடம் புலிகளின் பிரதிநிதிகள் தெளிவாக எடுத்து விளக்கியிருந்தனர். மக்களின் தேவை அடங்கிய பொருள்களின் பட்டியல் ஒன்றையும் திணைக்களங்கள் ஊடாகப் பெற்று யாழ். அரசாங்க அதிபர் மூலம் புலிகள் பிரிகேடியரிடம் சமர்ப்பித்திருந்தனர். இந்தப் பொருள்களின் குறிப்பிட்ட அளவாவது வடபகுதிக்கு வந்து சேர்ந்ததும் கைதிகளை விடுதலை செய்வதாக புலிகள் உறுதியளித்திருந்தனர். இந்த யோசனைக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தது.

ஆயினும் பொருள்கள் இங்கு வந்து சேருவதற்கு முன்னதாக கைதிகளை விடுதலை செய்யுமாறு அரசாங்கம் பிரிகேடியர் மூலம் கோரியது. ஆனால், பொருள்கள் ஓரளவேனும் வந்து சேரும் பட்சத்தில் தான் கைதிகளை விடுதலை செய்ய முடியுமென விடுதலைப்புலிகள் பிரிகேடியருக்கு எடுத்துக்கூறியதுடன், பொருள்களை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# புதிய நிபந்தனை விதிப்பதாக புலிகள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

33 பொலிசாரையும் இராணுவச்சிப்பாய் ஒருவரையும் விடுவிப்பதற்கு விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனைகளை விதித்துள்ளதால் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா கொழும்பு திரும்பிவிட்டதாக சிறிலங்கா வானொலி நேற்று அறிவித்தது.

அரசாங்கம் ஏழு பொருள்கள் மீது விதித்த தடையை தளர்த்தி அவை கப்பலில் எடுத்துச் செல்லப்படும் வேளை விடுதலைப் புலிகள் புதிய கோரிக்கைகளை விடுத்ததாக பிரிகேடியர் வீரசேகரா கொழும்பில் தெரிவித்ததாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது. 34 போர்க் கைதிகளையும் அவர்களது உறவினர்களையும் கொழும்பு அழைத்துவர பிரிகேடியர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சென்றதாக சிறிலங்கா வானொலி குறிப்பிட்டது.

கடந்த வார இறுதியில் தாம் யாழ்ப்பாணம் செல்லுமுன் விடுதலைப் புலிகள் அங்குள்ள திணைக்களங்களின் தலைவர்களை அழைத்து புதிய கோரிக்கைகளை விடுக்க இருப்பதாக அறிவித்திருந்தனர். இக்கோரிக்கைகள் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டதாகவும் பிரிகேடியர் வீரசேகரா கொழும்பில் தெரிவித்தார்.

# காங்கேசனுக்கு கப்பலை திருப்ப ஹமில்டன் உத்தரவு

[கொழும்பு]

தடை நீக்கப்பட்ட பொருள்களுடன் யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த எம் வி.ருகுணு கப்பல் நேற்று பிற்பகல் நடுக்கடலில் சென்றுகொண்டிருந்தபோது கப்பலை பருத்தித்துறைக்கு செலுத்த வேண்டாம் என கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உத்தரவிட்டதாக சிறிலங்கா வானொலி நேற்று மாலை தெரிவித்தது.

திட்டமிட்டபடி இக்கப்பலை பருத்தித்துறை கொண்டுசெல்ல வேண்டாம் என்றும் அதற்கு பதிலாக கப்பலை படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள காங்கேசன் துறைக்குக் கொண்டு செல்லுமாறும் தாம் உத்தரவிட்டதாகவும் ஜெனரல்ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.

# கைதிகள் விடுதலை முயற்சி தோல்வியில் முடிவடைந்தது

## பிரிகேடியர் வீரசேகரா

[கொழும்பு]

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள 33பொலிஸார் மற்றும் ஓர் இராணுவச் சிப்பாயையும் விடுவிப்பது தொடர்பாக தாம்எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றிரவு பி.பி. ஸிக்கு வீரசேகரா வழங்கியுள்ள பேட்டியின் போது கைதிகள் விடுதலை தோல்வியில் முடிந்தமை அரசாங்க உயர் அதிகாரிகளை புதியதொரு நெருக்கடி நிலைக்குள்ளாக்கியிருப்பது தவிர்க்க முடியாததாகி விட்டது என்றார்.

இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள பொலிஸாரின் பெற்றோரை மீண்டும் கொழும்பிற்கு அழைத்து வருவது என்பது மிகவும் கஷ்டமான ஒரு காரியமாக இருக்கும். தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிசாரில் ஐவரை விடுவித்த நிலையில் ஏனையோரை விடுவிக்காது விடுவதால் ஏற்படப் போகும் விளைவுகளைச் சமாளிக்க முடியாத நிலை உருவாகும், இவர்களது விடுதலை இடைநடுவில் நிறுத்தப்படுவதானால் அரசு பெரும் சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டி வரும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள பொலிஸ் கைதிகளின் பெற்றோரை கொழும்பிற்கு அழை

(6ஆம் பக்கம் பார்க்க)

[illegible] புலிகளின் தலைவர் பிரபாகரன் நேரடிப் பேச்சு நடத்த முன்வரவேண்டும் என்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுடில்லியில் இலங்கைக்கான தூதுவர் நெவில் கனகரட்ணா அளித்த தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதிலேயே ஆர்வம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

நேரடிப் பேச்சுவார்த்தை

சாங்கம் விடுத்துள்ள அழைப்பை புலிகள் நிராக

தம் தெரிவித்த அவர்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. அதிகாரிகள் இன்று யாழ். வருவர்

## புலிகளுடன் பேசுவர்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பாதையூடாக உணவு வாகனங்களை அனுப்புவது தொடர்பான பேச்சு வார்த்தையில் ஈடுபட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் இருவர் இன்று யாழ். வரவுள்ளனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய

(6ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# கிளாலி கடற்பரப்பில் துப்பாக்கி சூட்டுச் சத்தம்

(தென்மராட்சி)

அல்லிப்பளை, கிளாலி கடல் கரைகளை நோக்கி பூநகரி சிறீலங்கா இராணுவத்தினர் நேற்று மாலை 5 மணியளவில் எறிகணைத் தாக்குதல்களை நடத்தினர்.

பூநகரி முகாமில் இருந்து 3 எறிகணைகள் அல்லிப்பளை கிளாலி கடல்கரைகளில் வந்து விழுந்தன. எனினும் சேதவிபரம் தெரியவில்லை. பின்பு 6-30 மணியளவில் கடல் பிரதேசத்திலிருந்து துப்பாக்கி வேட்டுகள் தொடர்ச்சியாக 15 நிமிடம் வரை கேட்டன.

இதேவேளை இயக்கச்சி, கறுக்காய்தீவு பகுதி சிறிலங்கா

(6ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் புலிகள் முகாம்மீது இராணுவம் பாரிய தாக்குதல்

## 5 புலிகள் வீரச்சாவு; 2 படையினர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மாவில் கங்கையில் விடுதலைப் புலிகளின் முகாமை சுற்றி வளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர். இத்தாக்குதலின்போது இரண்டு இராணுவத்தினர் பலியாகினர். விடுதலைப் புலிகள் தரப்பில் 5 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

மட்டக்களப்பு மாவில் கங்கை எனுமிடத்தில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றிவளைத்து தாக்க வந்து பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றி வளைக்க வந்து பதுங்கியிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலின் போது இரண்டு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். பின்னர் சுற்றிவளைத்து தாக்குதலை மேற்கொள்ள முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகளின் மற்றொரு படையணி சுற்றி வளைத்து தாக்குதலை மேற்கொண்டது

இம் மோதல்கள் 4 மணிநேரம் இடம்பெற்றது. இம் மோதலின்போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக உலங்குவானூர்தி ஒன்று குண்டுவீச்சு விமானம் ஒன்று, புக்காரா விமானம் ஒன்று என்பன தாக்குதலில் ஈடுபட்டன. இரண்டாவது தடவையாக இடம்பெற்ற மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடை

(6ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் அதிரடி; இரு பொலிசார் பலி

## இரு வாகனங்கள் அழிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள கறிச்சட்டிப் பாலத்தில் வைத்து இரு பொலிஸ் வாகனங்கள்மீது விடுதலைப்புலிகள் நடாத்திய துணிகரத் தாக்குதலினால் அவ் இரு வாகனங்களும் கடலினுள் பாய்ந்ததுடன் ஒரு சப்இன்ஸ்பெக்டர் உட்பட இரு பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அத்துடன், ஒருவர் படுகாயமடைந்தார். இவர்களிடமிருந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் இரவு9-45 மணியளவில் மன்னார் தீவையும், தள்ளாடி இராணுவமுகாமையும் இணைக்கும் கடற்பாதையினூடாகத் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து மன்னார் பட்டினத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு ரூப்பர் வாகனம் மற்றும் அம்புலன்ஸ் வாகனம் ஆகியவற்றின் மீதே கறிச்சட்டிப் பாலத்தில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலால் இவ் இரு வாகனங்களும் கடலினுள் பாய்ந்தன.

கடலிற்குள் பாய்ந்த இரு வாகனங்களும் விடுதலைப்புலிகளால் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டன. விடுதலைப் புலிகளின் வெற்றிகரத் தாக்குதலினால் இரு பொலிசார் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஒருவர் காயங்களுக்குள்ளாகிய நிலையில் தப்பி ஓடிவிட்டார். இத்தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி தாக்குதலை அடுத்து பொலிசாரிடமிருந்து ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுத விபரம் வருமாறு:

★ ரி56-1ரகதுப்பாக்கி — 01
★ இதன் ரவைக்கூடு — 01

(6ஆம் பக்கம் பார்க்க)

# நாளை தபால் விநியோகம்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்திற்கு 'வாதுவ' கப்பலில் எடுத்து வரப்பட்ட 471 தபால் பொதிகள் இன்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, நாளை புதன்கிழமை முதல் விநியோகிக்கப்படும் என தபாலக வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

# வரி விளம்பரம்

**உணவுப் பார்சல்கள்**

ஜோ. எகட்டனின் ஜெசித் தாராவின் உணவுப்பார்சல்கள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக் கழக முன்வீதி. கந்தர்மடம் ஆகியஇடங்களிலும்பெற்றுக் கொள்ளலாம். (சி-6898)

**ஹோட்டல் ஞானம்ஸ்**

புதிய மெருகுடன் உள் நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கும், தரமான சுவையான உணவுபார்சல்கள், (முன் கூட்டியே ஓடருக்கும்) மற்றும் குளிர்பானம், மது பானம் அருந்துவதற்கும் திருமண வைபவங்கள், விருந்துபசாரங்கள் எதுவானாலும் உங்களை வரவேற்கின்றது- ஹோட்டல் ஞானம்ஸ்

(சி/6877)

**கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?**

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச்-அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6849)

அச்சுவேலி, மானிப்பாய்

## சேவை மீண்டும் ஆரம்பம்


1-7-93 முதல் அச்சுவேலியிலிருந்து புத்தூர் ஊடாக காலை 7-40 மணிக்கு மானிப்பாய்க்கும் மாலை 2 00 மணிக்கு மானிப்பாயிலிருந்து அச்சுவேலிக்கும் சேவை நடைபெறும் என்பதனை பிரயாணிகள் கவனத்திற்கு தெரியப்படுத்துகின்றோம்.

சிற்றூர்தி சேவை சங்கம்
அச்சுவேலி

(5238)

## ஓராண்டு நினைவஞ்சலி

முளையாக:
25 — 07 — 1966



விதையாக:
10 — 07 — 1992

### மேஜர் கிண்ணி/அசோகன்
### (கந்தசாமித்துரை ரவீந்திரன்)

திது: ௬0 . 6 . ௮3

இசைபாடும் கடல் நாட்டில் வந்துதித்தாய்
அண்ணனின் அணைப்பிலே கலை பயின்றாய்
தாயினும் நிகர் எங்கள் தாயகமே! எனவென்றாய்
தாக்கும் புலி வீரர்களுக்கெல்லாம் தளபதி நீ ஆனாய்
குற்றுயிர் ஆன பின்னும்
வைத்தகுறி தவறவில்லை
சிந்திய உன்குருதி தன்னால்
ஆனாலும் ஆயுதமாய் அணிவகுப்போம்.

நாளை எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலிநிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும் நண்பர்கள், உறறார், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/6916) - குடும்பத்தினர்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் ரஞ்சன்
(சுரேஷ்)

பிறப்பு: 1968-02-27
வீரச்சாவு: 1990-06-29

**ரஞ்சன் உன் ராகங்கள் எங்கே?**

ரஞ்சனே எங்கள் உயிர்த்தோழனே
நாயாற்று காடுகளின் புதல்வனே
மணலாற்று மண்காத்த மறவனே
மாறறானிடம் புறமுதுகு காட்டாப் புயலே
எரிமலையும் உன்சிரிப்பில் அடங்கும்
எரிகின்ற நெருப்பும் உன்மூச்சில் அணையும்
கர்ச்சிக்கின்ற விலங்கும் உன்னைக் கண்டால்
காலடியில் வந்து உன் தோழனாய் சேரும்
பூக்கின்ற மலர்களும் புதிய பாதை காட்டும்
புலர்ந்து போகின்ற புல்லுகளும் புதிய உணர்வு கொள்ளும்

## வீர அஞ்சலி
## ஓராண்டு நினைவலை



### வீரவேங்கை சேரன்
[சிவஞானம் அன்ரனிசில்ஸ்]
கட்டைக்காடு முள்ளியான்

(கட்டைக்காடு இராணுவத்துடனான நேரடிச்சமரில் வீரச்சாவடைந்தார்.)

தாயின் மடியில் 12- 12- 1969
தாயக மண்ணில் 29- 06- 1992

எம் அண்ணன் போனானடா—கட்டைக்காடு
அவனுடலைக் கண்டோமடா அதிர்வோடு
கட்டைக்காடு பூத்த புனிதனே
களம்பல கண்ட கலங்காத வேங்கையே—நீ
வீழ்ந்த செய்தி கேட்டு எம் இதயம் இடிந்ததைய்யா
விறுடன் நிலம் நோக்கி நடந்திடும் உன் நடையதனை
நீண்ட தவம் செய்தாலும் காணுவோமா இப்பிறப்பில்
அண்ணா! அண்ணா! என ஆயிரம்முறை கதறினாலும்
ஆறாத்துயர் தீர்க்க எம்மிடம் எப்போது வருவாயோ
எம்நடுவிலிருந்து பேசிடும் உன்பேச்சை எப்போது நாம் கேட்டிடுவோம்
உன் தங்கைகள் அறுவருக்கும் நடுவிலிருக்க — அந்த ஆண்டவனுக்கு பொறுக்கல்லையோ
மகனே! மகனே! என தினந்தோறும் மாண்டழும் உன்
தாயையும் ஒரேயொரு மகனென ஓரமுடன் வளர்த்த
உன் சிறியதாயையும் ஏனைய்யா இப்படி பதைபதைக்க விட்டாய்
பிஞ்சு வயதிலே எங்கள் உள்ளம் அழுதது பஞ்சமில்லா
எங்களுக்கு வாழ்வு கசத்தது
சொந்த மண்ணை பிறரால பொறாது பொங்கியே போனாயே
தமிழன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வனே தலைவன்
வழிநின்ற மானவேங்கையே
தங்கத்தால் எழுதினாலும் தகுமோ உன் புகழை— மீண்டும்
தமிழீழமதில் மலராயோ — அண்ணனே
எம் வாழ்வுத்தோட்டத்தில் நீ ஒரு வாடாமல்லிகை

புல்லரிக்கும் நினைவுகளுடன்
ஓராண்டு

## (கந்தசாமித்துரை ரவீந்திரன்)

திகதி: ௨0 . 6 . ௮3

இசைபாடும் கடல் நாட்டில் வந்துதித்தாய்
அண்ணனின் அணைப்பிலே கலை பயின்றாய்
தாயிலும் நிகர் எங்கள் தாயகமே! எனவென்றாய்
தாக்கும் புலி வீரர்களுக்கெல்லாம் தளபதி நீ ஆனாய்
குற்றுயிர் ஆனபின்னும்
வைத்தகுறி தவறவில்லை
சிந்திய உன்குருதி தன்னால்
இன்னும் ஆயிரமாய் அணிவகுப்போம்.

நாளை எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலிநிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும் நண்பர்கள், உற்றார், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/6916) - குடும்பத்தினர்.

---

## புல்லரிக்கும் நினைவுகளுடன்

# ஓராண்டு



# மேஜர் அழகன்

## (செல்வராசா இளங்கோ)

பிறப்பு:

**13-1-1966**

வீரச்சாவு:

**29-6-1992**

மண் மீட்கும் போர்க்களத்தில்
மறைந்திட்ட மாணிக்கம் - எங்கள்
எண்ணத்தில் நிறைந்திருக்கும்
எழில் வேந்தன் – அழகன்
கண்ணாலே இன்றெமக்கு
கசிந்தொழுகும் நீராறு
புண்ணாகி வரவில்லை
புல்லரிக்கச் செய்கிறது.

தயா, சாந்தகுமார், குணம், மதி

(சி-6914)

---



# மேஜர் ரஞ்சன்

## (சுரேஷ்)

பிறப்பு: 1968-02-27

வீரச்சாவு: 1990-06-29

### ரஞ்சன் உன் ராகங்கள் எங்கே?

ரஞ்சனே எங்கள் உயிர்த்தோழனே
நாயாற்று காடுகளின் புதல்வனே
மணலாற்று மண்காத்த மறவனே
மாற்றானிடம் புறமுதுகு காட்டாப் புயலே
எரிமலையும் உன்சிரிப்பில் அடங்கும்
எரிகின்ற நெருப்பும் உன்மூச்சில் அணையும்
கர்ச்சிக்கின்ற விலங்கும் உன்னைக் கண்டால்
காலடியில் வந்து உன் தோழனாய் சேரும்
பூக்கின்ற மலர்களும் புதிய பாதை காட்டும்
புலர்ந்து போகின்ற புல்லுகளும் புதிய உணர்வு கொள்ளும்
பூசைக்கு போகும் பூக்களும் புதிதாக பார்க்கும்
பூகம்பத்துக்குள் பூத்த புலிவீரனே
அன்னியர்களை ஆட்டிப்படைத்த மாவீரனே
இன்று ஏன் நிம்மதியாய் தூங்குகின்றாய்
சொந்தம் பந்தம் விட்டு தூரவிலகி விட்டாயே
ரஞ்சனே உன் ராகங்கள் எங்கே?
ரஞ்சனே நிம்மதியாக தூங்கிக்கொள்!

உன் கனவுகளை நாம் நனவாக்குவோம்
உன் நினைவோடு எம்பணியை தொடர்வோம்.

- நண்பர்கள்.

[5237]

---

கட்டைக்காடு பூத்த புலிதனே
களம்பல கண்ட கலங்காத வேங்கையே—நீ
வீழ்ந்த செய்தி கேட்டு எம் இதயம் இடிந்ததையா
வீறுடன் நிலம் நோக்கி நடந்திடும் உன் நடையதனை
நீண்ட தவம் செய்தாலும் காணுவோமா இப்பிறப்பில்
அண்ணா! அண்ணா! என ஆயிரம்முறை கதறினாலும்
ஆறாத்துயர் தீர்க்க எம்மிடம் எப்போது வருவாயோ
எம்நடுவிலிருந்து பேசிடும் உன்பேச்சை எப்போது நாம் கேட்டிடுவோம்
உன் தங்கைகள் அறுவருக்கும் நடுவிலிருக்க — அந்த
ஆண்டவனுக்கு பொறுக்கல்லையோ
மகனே! மகனே! என தினந்தோறும் மாண்டழும் உன்
தாயையும் ஒரேயொரு மகனென ஓரமுடன் வளர்த்த
உன் சிறியதாயையும் ஏனையா இப்படி பதைபதைக்க விட்டாய்
பிஞ்சு வயதிலே எங்கள் உள்ளம் அழுதது பஞ்சமில்லா எங்களுக்கு வாழ்வு கசத்தது
சொந்த மண்ணை பிறராள பொறாது பொங்கியே போனாயே
தமிழன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வனே தலைவன் வழிநின்ற மானவேங்கையே
தங்கத்தால் எழுதினாலும் தகுமோ உன் புகழை— மீண்டும்
தமிழீழமதில் மலராயோ — அண்ணனே
எம் வாழ்வுத்தோட்டத்தில் நீ ஒரு வாடாமல்லிகை
இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை
விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

29-06-1993 இன்று உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் எமது இல்லத்திற்கு வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்

செம்பியன்பற்று வடக்கு,
செம்பியன்பற்று.

தாய் சகோதரிகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(5239)

---

# நினைவு கூருகின்றோம் ...
# 1993-06-29

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் சரவணையில் சிறிலங்கா காவல்துறையினருடன் ஏற்பட்ட சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஸ்ரீபன்** (நடராசா ஆனந்தராஜா–அனலைதீவு- யாழ்)

1989ஆம் ஆண்டு மணலாறு–நாயாற்றுப்பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய-

**2ம் லெப். குமரன்** (முருகுப்பிள்ளை சம்பந்தர் - சிவன் கோவிலடி-திருமலை)

**நிசாம்** (யோகநாதசாமி தமிழ்ச்செல்வன் - கட்டைபறிச்சான், மூதூர்-திருமலை)

**மேஜர் ரஞ்சன்** (இராசதுரை சுரேஸ்-''தாயகம்'' பன்னாலை, தெல்லிப்பழை-யாழ்)

1990ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**மங்களா** (பொ. சசிக்குமாரி - வவுனியா)

மன்னார்-மறிச்சுக்கட்டியில் எமது மிதிவெடியில் சிக்கி சிகிச்சைக்காக யாழ் கொண்டு செல்லும் போது வீரச்சாவெய்திய.

**2-ம்லெப் பாண்டியன்** (திரவியம் வீரசிங்கம் (எட்வின்)- பெரியகடை-மன்னார்)

அம்பாறை-அறுகம்பை முகாமில்வைத்து சிறீலங்காப் படையினால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவில்-உல்லையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

மட்டு-கல்லடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின்னர் திரையரங்கு ஒன்றினுள் இருந்து கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட நாவலடியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

மணலாறு-கொக்கிளாய், செமமலை-நாயாறுப்பகுதிகளில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

யாழ்-பலாலி கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொலலப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டு-மகிளூர் முனைத்துறையில் பதுங்கியிருந்த சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய.

**மதிவதனன்/மணிவதனன்** (கதிரையா மணிவண்ணன்- கோட்டைக்கல்லாறு-மட்டு)

**நவேந்திரன்** (கந்தவனம் மகேந்திராஜா - கோட்டைக்கல்லாறு,-மட்டு)

**வர்ணன்/அபூர்வராஜன்** (நல்லதம்பி இராஜேந்திரன்- கோட்டைக்கல்லாறு, கல்லாறு-மட்டு)

கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

ஈழநாத நிர்வாகப்பொறுப்பாளர்,

**மேஜர் அழகன்** (செல்வராசா இளங்கோ-கல்வயல், சாவகச்சேரி-யாழ்)

**சேரன்** (சிவஞானம் அன்ரனிசில்-முள்ளியான்,கட்டைக்காடு யாழ்)

**சிற்றம்பலம்/சபேசன்** (புலேந்திரன் அன்ரன் அஜதாஸ்- நெடுந்தீவு-யாழ்)

சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியில் விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட பொலிஸ் ஊழியரான பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6910)

# பாகிஸ்தான் உதாரணத்தை சிறிலங்காவும் பின்பற்றும்

## சந்திரசேகரன் வழக்கில் நீதிபதி

(கொழும்பு)

திருமதி பெனாசீர் பூட்டோவின் கணவர் சிறையிலிருந்து தேர்தலில் போட்டியிட்டுப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பின் அவர் பதவிப் பிரமாணம் எடுக்க பாகிஸ்தான் பொலிஸ் அனுமதித்தது. பாகிஸ்தான் பொலிசின் இந்த உதாரணத்தைச் சிறிலங்காப் பொலிஸ் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி டி. ஜெயவிக்கிரமா தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது நீதிபதி டி. ஜெயவிக்கிரமா இதனைத் தெரிவித்தார்.

மத்திய மாகாணசபை உறுப்பினராக சந்திரசேகரன் பதவிப் பிரமாணம் எடுக்க அனுமதிக்கக் கோரி வழக்கறிஞர் ஏ. டபிள்யூ. ஜூசுப் மனுத்தாக்கல் செய்து வாதிடும் போது நீதியரசர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைச் செயலகக் குண்டு வெடிப்புச் சந்தேக நபர் வரதனுக்குத் தங்குமிடம் வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு சந்திரசேகரன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் ஜூலை 1991 இல் கைது செய்யப்பட்டார்.

சந்திரசேகரன் மே 17, 1993 இல் மாகாண சபைத் தேர்தல் மத்திய மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

நீதிபதியின் வேண்டுகோளைத் தான் சட்டமா அதிபருக்குத் தெரியப்படுத்தி ஆலோசனை கலக்கவுள்ளதாக அரச தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார். இது குறித்து மத்திய மாகாண சபைத் தலைவர் சட்டமா அதிபருக்கு எழுதியுள்ளதாகவும் அரச தரப்பு வழக்கறிஞர் சுறாக் தயாரெட்ணா தெரிவித்தார்.

## மலையக இளைஞர் கைது தடுக்க உதவுக

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பில் மலையக இளைஞர்களும், யுவதிகளும் பரவலாகக் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் இவ்விடயத்தில் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க நேரடியாகத் தலையிட வேண்டும் என்று தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ் விடயம் தொடர்பாக தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் இணைப்பாளர் எஸ். நடேசன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேலும் தெரிவித்திருப்பதாவது: இத்தகைய கைது நடவடிக்கைகள் தொடர்வது மலையக இளைஞர்கள் மத்தியில் வெறுப்பும் விரக்தியும் வளர்வதற்கு வழி வகுக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## 'கம்உதாவ' திட்டம் வெறும் கேளிக்கை அல்ல

### - சிறிசேன கூரே

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் ஆரம்பிக்கப்பட்ட கம்உதாவ என்னும் கிராம எழுச்சித் திட்டத்தை வெறும் தமாஷ'க்கள் என்று வர்ணிப்போர் தமது அரசியல் எதிர்காலம் குறித்து அச்சம் கொண்டவர்களே என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்தார்.

மிகிந்தலையில் இடம்பெற்ற பதினைந்தாவது கம்உதாவ கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், அநுராதபுரத்திலிருந்து மிகிந்தலை வரை புதிய ரயில்பாதை அமைக்கப்பட்டதே இது கேளிக்கையா? பின்தங்கிய கிராமங்களில் இருக்கும் வீடற்றவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டதே இது கேளிக்கையா? விகாரைகளும், கோவில்களும், தேவாலயங்களும் புனரமைக்கப்பட்டனவே இது கேளிக்கையா? விவசாய உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான மையங்கள் அமைக்கப்பட்டனவே இவை வீண் செலவுகளா? என்றும் கேள்வி எழுப்பினார். அத்துடன் கிராம எழுச்சித் திட்டங்களின் மூலம் கிராமங்களில் ஐ.தே.கவின் செல்வாக்கு உயர்ந்துள்ளது என்பது அண்மைய மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு அரச அதிபர் மறுப்பு

(மட்டக்களப்பு)

கல்குடாவிலிருந்து 1990இல் இடம் பெயர்ந்த சிங்கள மீனவக் குடியேற்ற வாசிகளை மீண்டும் அண்மையில் அங்கு குடியேற்றியபோது அவ்வைபவத்தில் தாம் கலந்து கொள்ளவில்லை என மட்டக்களப்பு அரச அதிபர் இ. மோனகுருசாமி மறுத்துள்ளார்.

இக்குடியேற்ற வைபவத்தில் மோனகுருசாமி கலந்து கொண்டதாக செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

## வரலாறான முதலாம் ஆண்டின் நினைவலைகள்

## நிர்வாகிகள் தெரிவு

றைபைசென் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தின் ஆறாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் யாம்...

## இராணுவ முகாம்களைச் சூழ சிங்களக் குடியேற்றம்

(அம்பாறை)

அம்பாறையில் சிறிலங்கா விமானப்படையினர் தமக்குக் காப்பரணாக தமது முகாமைச் சூழ 150ற்கு மேற்பட்ட சிங்கள குடும்பங்களை புதிதாகக் குடியேற்றிஇருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை மாஓயா பிரதான பாதையில் பக்கி எல்லை விமானப் படைத் தளத்திலிருந்து மாஓயா வரையிலான பகுதிகளிலேயே இச் சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

மேற்படி முகாமை விடுதலைப்புலிகள் தாக்கலாம் என்ற அச்சுறுத்தலாலேயே இம் முகாமின் வெளிப்புறத்தின் பல மைல் தூரத்திற்கு முகாமின் பாதையின் இரு மருங்கிலும் இவ் அப்பாவிச் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

மாலை 6 மணிக்குப் பின் இம் மக்கள் வெளியில் நடமாட விமானப்படையினர் தடை விதித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை தற்போது இப்பகுதிகளில் மிதிவெடிகளைப் புதைப்பது பற்றி படையினர் ஆலோசித்து வருவதாகவும், சிங்கள மக்களை பலிக்கடாவாக மாற்ற அரசு முயல்வதாகவும் 'யுதிய' என்ற சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## பொலிஸ் அதிகாரியின் துப்பாக்கி மாயம்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சி ஐ. சி. பத்மதேவ என்பவரின் உத்தியோக பாவனைக்கான கைத்துப்பாக்கி அவரின் படுக்கை அறையின் தலையணைக்கு கீழ் இருந்து காணமல் போயுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மூன்று அரச அத்தியாவசிய சேவையாளர்கள் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டு அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திரு. எஸ். விஸ்வநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக காயங்கள் உள்ள ஒரு நபரைப் பொலிசார் தேடிவருகின்றனராம்.

## கண்டெடுப்பு

பருத்தித்துறை - நெல்லியடி வீதியில் சச்சிதானந்தம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வையொன்று எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## புத்தளம் உடப்பு பகுதியிலும் தமிழிளைஞர்கள் கைது

புத்தளம் பகுதியிலும் உடப்பு, முன்னேஸ்வரம், கற்பிட்டி போன்ற இடங்களில் தமிழ் இளைஞர்கள் எண்ணுக்கணக்கின்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வருகின்றனர் என முறையிடப்பட்டுள்ளது.

காலங்காலமாக இப்பகுதியில் வாழ்ந்த பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் அண்மைக் காலங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அதிகார துஷ்பிரயோகம் இன்றும் தொடர்கிறது

### ஜி. எம். பிரேமச்சந்திரா கண்டனம்

(கொழும்பு)

பிரேமதாசா காலத்தில் நடைபெற்ற துஷ்பிரயோகங்களை கூறுவதை விடுத்து தொடரும் காலங்களில் அவை தொடராதிருக்க ஐ தே. கட்சியினர் செயற்பட வேண்டும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி செயலாளர் திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

ராவய பத்திரிகைக்கு வழங்... நன்கு உணர வேண்டும். இவர்கள் பிரேமதாசா காலத்தில் நடைபெற்ற துஷ்பிரயோகங்கள் பற்றி பேசுகின்றனர். ஆனால் இன்றும் அதேபோன்ற நடவடிக்கைகளே தொடருகின்றன.

மாகாண சபைத் தேர்தலில் நடைபெற்ற சம்பவங்கள் இதற்கு சான்றாக உள்ளன. இது பற்றி அரசு இதுவரை எந்த...

## 99 வருட குத்தகைக்கு பெ.தோட்டங்கள் கையளிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்டங்கள் அனைத்தையும் இருப்பதிரண்டு பிரதேச பெருந்தோட்ட நிறுவனங்கள் 99 வருடக் குத்தகையில் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது. ஏலவே ஹட்டனிலும், புசல்லாவையிலும் 16 தோட்டங்கள் 99 வருடக் குத்தகை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன.

தனியார் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள 449 பெருந்தோட்டங்களில் இப்போது எஞ்சியுள்ள 439 தோட்டங்களும் குத்தகை அடிப்படையில் கையளிக்கப்படவுள்ளதாகப் பெருந் தோட்டத் தொழில் அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வரதருக்குப் பாராட்டு

முது பெரும் எழுத்தாளர் வரதர் அவர்களை கௌரவிக்கும் முகமாக பாராட்டுக் கூட்டமொன்று எதிர் வரும் முதலாம் திகதி பிற்பகல் 4 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## ஓராண்டு நினைவலைகள்

பிறப்பு: 21 — 07 — 74



வீரச்சாவு: 09 — 07 — 92

## லெப். சொக்கன் (சின்னா)

[கிறிஸ்ரி ராஜ்மோகன்]

(இயக்கச்சியில் வீரச்சாவு)

திதி: 29- 06- 93

"ஆண்டொன்று சென்றதடா - ஆறவில்லை எம்மனது!
பள்ளியைப் பாதியில் விடுத்து படையணி சேர்ந்தவனே!
புலியாகப் பாய்ந்து பலகளமாடி இயக்கச்சியில்
காவியமாகியவனே!
உன் நினைவால் ஏங்குகின்றோம்!... தினமும்
ஏங்குகின்றோமே..."


இவருடன் வீரச்சாவு எய்திய சகபோராளிகளையும் நினைவு கூருகின்றோம் 29-6-93 இன்று நிகழும் ஓராண்டு நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

ஆலடிச்சந்தி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் உம்பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

(சி-6911)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



(மட்டக்களப்பு)

கல்குடாவிலிருந்து 1990இல் இடம் பெயர்ந்த சிங்கள மீனவக் குடியேற்ற வாசிகளை மீண்டும் அண்மையில் அங்கு குடியேற்றியபோது அவ்வைபவத்தில் தாம் கலந்து கொள்ளவில்லை என மட்டக்களப்பு அரச அதிபர் இ. மோனகுருசாமி மறுத்துள்ளார்.

இக்குடியேற்ற வைபவத்தில் மோனகுருசாமி கலந்து கொண்டதாக செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

வெறும் தமாஷ்'க்கள் என்று வர்ணிப்போர் தமது அரசியல் எதிர்காலம் குறித்து அச்சம் கொண்டவர்களே என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்தார்.

மிகிந்தலையில் இடம்பெற்ற பதினைந்தாவது கம்உதாவ கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், அநுராதபுரத்திலிருந்து மிகிந்தலை வரை புதிய ரயில்பாதை அமை

கோவில்களும், தேவாலயங்களும் புனரமைக்கப்பட்டனவே இது கேளிக்கையா? விவசாய உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான மையங்கள் அமைக்கப்பட்டனவே இவை வீண் செலவுகளா? என்றும் கேள்வி எழுப்பினார். அத்துடன் கிராம எழுச்சித் திட்டங்களின் மூலம் கிராமங்களில் ஐ. தே. கவின் செல்வாக்கு உயர்ந்துள்ளது என்பது அண்மைய மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ப்பு, முன்னேஸ்வரம், கற்பிட்டி போன்ற இடங்களில் தமிழ் இளைஞர்கள் எண்ணுக்கணக்கின்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வருகின்றனர் என முறையிடப்பட்டுள்ளது.

யில் வாழ்ந்த பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் அண்மைக் காலங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அதிகார துஷ்பிரயோகம் இன்றும் தொடர்கிறது

### ஜி. எம். பிரேமச்சந்திரா கண்டனம்

(கொழும்பு)

பிரேமதாசா காலத்தில் நடைபெற்ற துஷ்பிரயோகங்களை கூறுவதை விடுத்து தொடரும் காலங்களில் அவை தொடராதிருக்க ஐ தே. கட்சியினர் செயற்பட வேண்டும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி செயலாளர் திரு. ஜி எம். பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

ராவய பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது பழைய பிழைகளை திருத்திக் கொள்வதற்கு முன்னர் புதிதாக பிழைகளை விடாது செயற்பட வேண்டும். இதனை ஐ தே. க. தலைமைப்பீடம் நன்கு உணர வேண்டும். இவர்கள் பிரேமதாசா காலத்தில் நடைபெற்ற துஷ்பிரயோகங்கள் பற்றி பேசுகின்றனர். ஆனால் இன்றும் அதேபோன்ற நடவடிக்கைகளே தொடருகின்றன.

மாகாண சபைத் தேர்தலில் நடைபெற்ற சம்பவங்கள் இதற்கு சான்றாக உள்ளன. இது பற்றி அரசு இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுத்ததாக தெரியவில்லை யார் எதைச் செய்திருந்தாலும் அதனைச் செய்தது ஐ. தே. க என்பதனை சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

வாகரையில்

# மக்கள் இரவில் நடமாட இராணுவம் தடைவிதிப்பு

[கொழும்பு]

வாகரைப் பிரதேசத்தில் மக்கள் இரவில் நடமாடுவதற்கு இராணுவம் தடை விதித்து உள்ளது.

வாகரைப் பகுதியில் வாகரை வைத்தியசாலையிலும், காயான்கேணி சரஸ்வதி வித்தியாலயத்திலும், தும்மிவெட்டுவானில் அ. த.க. பாடசாலையிலும் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் இரவு 7 30 மணி முதல் அதிகாலை 5.30 மணி வரை மக்கள் நடமாடுவதற்குத் தடை விதித்துள்ளனர். அத்துடன் கடலில் மீன்பிடிப்பதற்கும் கூடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வர்த்தகர்கள் தமது கடைகளுக்குப் பொருள்களை எடுத்துச் செல்வதானால் கூட இராணுவத்தினரின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என்றும் உத்தரவு இடப்பட்டு உள்ளது.

## நிர்வாகிகள் தெரிவு

றைபைசென் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தின் ஆறாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் கூட்டப்பட்டது. அப்போது புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக செல்வி யோ. மாதங்கியும், செயலாளராக செல்வி மு ஜானகியும், பொருளாளராக செல்வி மு பிறேம நந்தினியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் மேலும் உப தலைவராக திருமதி அ மனோரஞ்சிதமும் நிர்வாக உறுப்பினா மூவரும். உட்துறை எண் பார்வை உறுப்பினர் மூவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## நீண்ட விடுமுறையில் பொலிஸ் மா அதிபர்

பொலிஸ் மா அதிபர் ஏனெஸ்ட் பெரேரா விடுமுறையில் சென்றுள்ளார். பதில் கடமைகளைச் செய்வதற்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.பி. பிறாங் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸ்மா அதிபர் ஏனெஸ்ட் பெரேரா நீண்ட நாட்கள் விடுமுறையில் நிற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருட்டு

(தென்மராட்சி)

கெற்பலி மிருசுவிலில் தோட்டம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த வில்லியஸ் ரக நீர் இறைக்கும் இயந்திரம் இனந்தெரியாதவர்களால் களவாடப்பட்டுள்ளது. கடந்த 15-ம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நாகலிங்கம் என்பவரே தனது இயந்திரத்தைப் பறிகொடுத்தவர் ஆவார்.

இதேபோல பளை இத்தாவில் பகுதியிலும் த.புவனேஸ்வரி என்பவரும் தனது றொபின் ரக நீரிறைக்கும் இயந்திரம் களவாடப்பட்டிருப்பதாக பளையிலுள்ள காவல் துறை அலுவலகத்தில் முறையிட்டுள்ளார். [86]

# வரலாறான முதலாம் ஆண்டின் நினைவலைகள்



## மேஜர் அழகன்

(செல்வராசா இளங்கோ)

பெருந்துணை நீ என்று
பெருமையோடு நாமிருக்க
வரும் ரவைக்கு இரையாகி
வாழ்வைத் தொலைத்தாயா...
இலலை... இல்லை...
இந்த வையகமும் எம் நாடும்
வாழும் வரையிலும் வாழ்கின்ற
வரலாறு உன் வாழ்வு எனப்
பேரெடுத்தாய் எம் அழகா!
பேறுபெற்றோம் உங்களாலே.

- ஈழநாத ஊழியர்

(இ)


# யாழ். மத்தியில் ஊருருவல்...

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா

வாடிக்கையாளரின் நலன்கருதி
408, ஆஸ்பத்திரி வீதி,
சண்டோஸ் மதுபானச்சாலையில்
(பழைய பஸ் நிலைய முன்பாக)
எமது தரமான, சுவையான,
உணவுப் பார்சல்களை
காலை 11-45 முதல் பி. ப. 3-30 மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்.
என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகிறோம்.

மரக்கறி ரூபா 25/-
மீன்/இறைச்சி ரூபா 30/-

ஜோ. எகட்டனின் **ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

ஜெசித்தாரா புதுயுகத்தில் ஓர் புது உருவம்

விளம்பர வடிவமைப்பு
செனித்

(சி-6897)


பள்ளியைப் பாதியில் விடுத்து படையணி சேர்ந்தவனே!
புலியாகப் பாய்ந்து பலகளமாடி இயக்கச்சியில்
காவியமாகியவனே!
உன் நினைவால் ஏங்குகின்றோம்!... தினமும்
ஏங்குகின்றோமே..."

இவருடன் வீரச்சாவு எய்திய சகபோராளிகளையும் நினைவு கூருகின்றோம் 29-6-93 இன்று நிகழும் ஓராண்டு நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

ஆலடிச்சந்தி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் உம்பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

(சி-6911)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப்டினன்ட் வீமா

[ரவீந்திராதேவி தங்கராசா]

ஜனனம்: 28-09-1973
வீரச்சாவு: 08-07-1992

திதி: 29. 06. 93


தமிழ்த்தாயுடைய அரவணைப்பிலிருக்கும் வீமா!
மண்ணினை மீட்கவென புறப்பட்ட - நீ
உனது உதிரங்களை மண்மாதாவின் தாகத்திற்காய்
கொடுத்தாய் - அதை
கொண்டு திருப்தியடையாது உனது உயிரையும்
அவளுக்கு தானம் பண்ணி ஏாய் அதுவும் போதாது என
உனது உடலையும் - அவளிடமே ஒப்படைத்து விட்டாய்
உனது கல்லறையிலிருந்து பல
கரங்கள் உயர்ந்துள்ளன
அவைகள் உனது கனவை
நனவாக்க தமிழ் அன்னையின்
மடியில் வீர நடை போடுகின்றன.

நவகிரி

சின்னையா, சின்னம்மா
சகோதரர்கள், சகோதரிகள்.

(சி/6913)

# நான்காண்டு நிறைவு நினைவஞ்சலி



## வீரவேங்கை மேஜர் ரஞ்சன்

(இராசதுரை சுரேஸ்)

பிறப்பு : 1968-02-27 மாவீரனாய்: 1989-06-29

எம்மண்ணை மீட்டெடுக்க
எழுந்திட்ட வேங்கையே
செம்மலை அலம்பிலில்
தீரமாய் போராடி
இம்மண்ணில் வீரத்தின்
விதையான வீரனே
எம்மிதயக் கோட்டிலே
என்றும் நீ வாழ்கின்றாய்
ஈழத்துப் பொன்னேட்டில்
என்றும் நீ வாழ்ந்திடுவாய்.

உன்பிரிவால் வாடும்,

ஐயா, அம்மா, அக்காமார் அண்ணன்மார்,
அத்தான்மார், அண்ணி, சிறியதாய்மார்,
மாமன் மாமிமார், மருமக்கள்மார்,
பெறாமக்கள், சுற்றத்தார்,
நண்பர்கள், போராளிகள்.

பன்னாலை,
தெல்லிப்பழை,
29-06-1993.

(5188)

# ஓராண்டு நினைவலைகள்



# யுத்த அழிவுக்கு சான்றாக யாழ்ப்பாணக்காட்சி உள்ளது

## - பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா

[கொழும்பு] யுத்தத்தினால ஏற்பட்ட அழிவுக்கு யாழ்ப்பாணம் சிறந்த உதாரணமாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் தேவைப்படுவது சமாதானம். அப்பகுதி மக்கள் எந்த நேரமும் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற பீதியுடன் வாழ் கின்றனர். இவ்வாறு புனர்வாழ்வு ஆளுநர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா கொழும்புப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

''யாழ்ப்பாணத் திலுள்ள பெரும்பாலான கடைகள் பொருள்கள்ஏதுமின்றி திறந்து வைக்கப்பட்டுள்ளன. யாழ். நகரிலுள்ள பல்வேறு இடங்களுக்கும் நான் விஜயம் செய்த போது கரும் புலிகள் எனக்கு பாதுகாப்பு அளித்தனர். மறைந்த போராளிகள் நினைவாக நகரில் பெரும் 'கட் அவுட்டுகள்' வைக்கப்பட்டுள்ளன 1986 ஆம் ஆண்டுக்கு பின் எந்த இராணுவ அதிகாரியும் யாழ்ப்பாணம் செல்லவில்லை என பிரிகேடியர்வீரசேகரா மேலும் தெரிவித்தார்.

பத்து வருடத்திற்கு பின் நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தேன் நகர் இருளில் மூழ்கியுள்ளது. யுத்த அழிவுகளை நகர் எங்கும் காணமுடிகிறது. நான் கப்பலில் சென்று பருத்தித்துறையில் இறங்கிய போது அங்கு பல ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கூடியிருந்தனர். அவர்கள் சமாதானத்தை விரும்புகின்றனர் விடுதலைப் புலிகளும் உண்மையில் சமாதானத்தை விரும்புகின்றனர் என அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்தார்.

# 90-ம் நாள் நினைவஞ்சலி



## கடற்புலி லெப்டினன்ட் அரசகுமாரி

[பேதுரு கிறேசி]

[வஞ்சியன்குளம், வங்காலை, மன்னார்]

பேசும் கதையாய் 30. 3. 1971 போற்றும் விதையாய் 29. 3. 1993

நேற்றுப் போல் இருக்கிறது நீ இருந்தது
காற்றுப் போல் சுழன்று எங்கள் - கனவுகளில்
ஊற்றுப் போல் செங்குருதி சுரந்தவளே - எமது
விடுதலைப் பயணத்தில் வித்தாகிப் போனாயே......

- நண்பர்கள்

[5209]


### சிறப்பு

## இன்னிசைக் கச்சேரி

சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன் மகோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று செல்வி சூரியகுமாரி மார்க்கண்டுவின் இன்னிசைக் கச்சேரி சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பாலச்சந்திர சர்மா (மிருதங்கம்) வெங்கடேஸ்வர சர்மா (வயலின்) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

# நெஞ்சம் நெகிழும் 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த

## அமரர் திரு. வைத்திலிங்கம் பாலசுந்தரம்

அன்னை மடியில்: 17-10-1935 இறைவன் அடியில்: 30-05-1993

எமது அன்புத் தெய்வமே — குடும்ப விளக்கே
பாசத்தின் சிகரமே, எங்கள் வாழ்வின் வழிகாட்டியே
எங்கள் ஐயாவே, எல்லோர்க்கும் ஐயாவே!
காலங்கள எத்தனை கரைந்து போனாலும்
கரைந்து போகுமா உங்கள் நினைவு
எங்கு நீர் சென்றீர் எமை விட்டு
விழுதுகள் நாம் இருக்க — வீசு புகழ்
விருட்சம் தான் வீழ்ந்த தென்ன
தவிக்கின்றோம் உங்கள் பிரிவால் — தங்கள்
ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை எங்கள் கண்ணீர்ப் பூக்களால்
பிரார்த்திக்கின்றோம்.

30-5-93 அன்று அமரரான எங்கள் அன்புத் தெய்வம் அமரர் வைத்திலிங்கம் பாலசுந்தரத்தின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டவர்கட்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், எம்மோடு தோளோடு தோள் நின்று எமக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அவ்வகையில் உதவி செய்தோர்க்கும் எமது இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று 29-6-93 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும், மதிய

எம்மிதயக் கோட்டிலே
என்றும் நீ வாழ்கின்றாய்
ஈழத்துப் பொன்னேட்டில்
என்றும் நீ வாழ்ந்திடுவாய்.

உன்பிரிவால் வாடும்,

ஐயா, அம்மா, அக்காமார் அண்ணன்மார்,
அத்தான்மார், அண்ணி, சிறியதாய்மார்,
மாமன் மாமிமார், மருமக்கள்மார்,
பேறாமக்கள், சுற்றத்தார்,
நண்பர்கள், போராளிகள்.

பன்னாலை,
தெல்லிப்பழை,
29-06-1993.

(5188)

## ஓராண்டு நினைவலைகள்



### லெப். வீமா

[தங்கராசா ரவீந்திராதேவி]

பிறப்பு:
29-09-1973

வீரச்சாவு:
09-07-1992

திதி: 29-06-1993

சுவடுகளை இரத்தத்தால் பதித்துவிட்டு;
சுடராக எரிந்தாயே இயக்கச்சிதனில்;
கூவக் குரலெடுத்த குயிலே நீ வசந்தத்தைக்
குறித்துக் களமாடி தாய் மண்ணில் வீழ்ந்தாயோ?
சாவைச் சரித்திரமாய்ச் சந்ததிக்குச் சமர்ப்பித்து;
சாதனை புரிந்தவளே! சிங்களத்துச் சிப்பாய்கள்
நாவலறி ஓடவைத்து; நாடு காத்த இளம்புலியே!
நாமம் அழியாது நம் வீர அஞ்சலிகள்......

09 07-92 அன்று இவருடன் வீரச்சாவடைந்த போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இன்று (29-06-93) எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி வைபவத்தில் சகபோராளிகள், உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நவற்கிரி, புத்தூர். [5233] -குடும்பத்தினர்



### கடற்புலி லெப்டினன்ட் அரசகுமாரி

[பேதுரு கிறேசி]

[வஞ்சியன்குளம், வங்காலை, மன்னார்]

பேசும் கதையாய் 30. 8. 1971 — போற்றும் விதையாய் 29. 3. 1993

நேற்றுப் போல் இருக்கிறது நீ இருந்தது
காற்றுப் போல் சுழன்று எங்கள் - கனவுகளில்
ஊற்றுப் போல் செங்குருதி சுரந்தவளே - எமது
விடுதலைப் பயணத்தில் வித்தாகிப் போனாயே......

[5209] - நண்பர்கள்

### சிறப்பு

#### இன்னிசைக் கச்சேரி

சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன் மகோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று செல்வி சூரியகுமாரி மார்க்கண்டுவின் இன்னிசைக் கச்சேரி சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பாலச்சந்திர சர்மா (மிருதங்கம்) வெங்கடேஸ்வர சர்மா (வயலின்) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



முன்னாள் ஈழநாதம் நிர்வாகப்பணிப்பாளர்

### மேஜர் அழகன்

(செல்வராசா இளங்கோ)

தாயின் மடியில்:
13 . 01 . 1966

வீரச்சாவு:
29 . 06 . 1992

அழகனே! எங்கள் ஆறுதல் நண்பனே
செந்தமிழின் சிரிப்பொலியால்
வந்து தினம் செல்கின்றாய்!
சென்ற உன் அந் நாளை
இந் நாளில் நினைக்கின்றோம்.

11/1, செம்மணி ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

நிதமும் நின் நினைவில் வாடும் நெஞ்சங்கள்
குளோபல் என்ஜினியரிங்
ரெக்னோலொஜி சேர்விஸஸ்
32, கச்சேரி நல்லூர், யாழ்ப்பாணம்.

[சி-6850]

17-10-1935 — 30-05-1993

எமது அன்புத் தெய்வமே — குடும்ப விளக்கே
பாசத்தின் சிகரமே, எங்கள் வாழ்வின் வழிகாட்டியே
எங்கள் ஐயாவே, எல்லோர்க்கும் ஐயாவே!
காலங்கள எத்தனை கரைந்து போனாலும்
கரைந்து போகுமா உங்கள் நினைவு
எங்கு நீர் சென்றீர் எமை விட்டு
விழுதுகள் நாம் இருக்க — வீசு புகழ்
விருட்சம் தான் வீழ்ந்த தென்ன
தவிக்கின்றோம் உங்கள் பிரிவால் — தங்கள்
ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை எங்கள் கண்ணீர்ப் பூக்களால்
பிரார்த்திக்கின்றோம்.

30-5-93 அன்று அமரரான எங்கள் அன்புத் தெய்வம் அமரர் வைத்துலிங்கம் பாலசுந்தரத்தின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டவர்கட்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், எம்மோடு தோளோடு தோள் நின்று எமக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அவ்வகையில் உதவி செய்தோர்க்கும் எமது இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


இன்று 29-6-93 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும், மதியபோசனத்திலும கலநதுகொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைககின்றோம்.

இராச வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர். (5232)

மனைவி,
பிள்ளைகள்,
உறவினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 25 — 01 — 1971



விண்ணில் 09 — 07 — 1992

### வீரவேங்கை அறிவொளி

(வர்மன்)

(தங்கலிங்கம் சிவகுகன்)

அளவெட்டி

தன்மானத் தமிழனாய்த் தலை நிமிர்ந்து வாழ எண்ணி
தந்தையில்லாத் தன்குடும்பம் சிந்தையிலே நோக்காது
தம்பி தானையில் நீ இணைந்தாய் சிவகுகனே
அறிவெளியாய் அந்நியனை நீ எதிர்த்தாய்
அறிவிலான் காலன் அநியாயம் அநியாயம்
பாரில் புகழ்படைத்த பதினெண் வேங்கைகளைத்
தமிழீழ வித்தாக்கித் தரணியிலே சாய்த்துவிட்டான்
மகனே மலரும் தமிழீழத்தை மாண்புடனே காணத்
தோழருடன் வா

இன்று (29-06-93) அன்னாரது ஆட்டத்திவசக் கிரியையில் கலந்துகொண்டு மதியபோசன விருந்திலும் பங்குபற்றிச் செல்லுமாறு சகல போராளிகளையும் அன்புடன் அழைககின்றோம்,

அலிஸ்ரன் வீதி,
(பெரியமதவடி ஒழுங்கை)
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

அறிவொளி குடும்பம்
(ரீச்சர் அளவெட்டி)

(5207)

### சிந்தனைக்கு

அடக்கம் நிதானத்தின் இணைப்பு. ஆடைக்கு விளிம்பு போல.

- ஜெரோமி டேயிலர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-06-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## வேண்டப்படாத விளைவுகள்

இன்று நிகழும் சில மரணங்கள் குறித்து வேதனைப்படுவதா? ஆத்திரப்படுவதா? என்றே புரியவில்லை. இனப்படுகொலைக்கு உள்ளாகியிருக்கும் ஓர் இனத்தில், சிறு எண்ணிக்கையானாலும் தமது தவறுகளினால் தம் அழிவிற்கு தாமே காரணமாவது பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாகும். இது கண்டிக்கப்படக் கூடியதும், அனுமதிக்க முடியாததும் ஆகும்.

கடந்த வாரத்தில் மட்டும் வெடிக்காத ஷெல்லுடன் 'விளையாடியதன்' விளைவாக இரு வேறு சம்பவங்களில் இருவர் பரிதாபகரமாக இறக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. பலர் படுகாயம் அடைந்து துயருற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வெடிப் பொருள்களுடன் விளையாடுவது ஆபத்தானது எனப் பல தடவை பல தரப்பிலிருந்தும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கம் இது குறித்துப் பகிரங்க எச்சரிக்கைகளும், அறிவிப்பும் வெளியிட்டு இருந்தது. பத்திரிகைகளும் இவை குறித்துச் சுட்டிக்காட்டியிருந்தன. இதே பத்திரிகையில், இதே பகுதியில் [ இது குறித்து] எச்சரிக்கை செய்யப்பட்டும் இருந்தது.

ஆனால் இதனை அநேகர் கவனத்தில் கொண்டதாக இல்லை. கவனத்தில் கொண்டிருப்பின் இவ்வாறான துயரச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆகையினால், இவ்வாறான துயரச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இதனால் மரணமடைந்த / பாதிக்கப்பட்டவர்களின் சிந்தனையற்ற நடவடிக்கைகளும், ஏனையோரது அசட்டையுமே காரணமாகும்.

எமது மண்ணில் பல வருடங்களாக யுத்தம் தொடர்ந்து நடந்து வருவதினால் எதிரி பயன்

# ஜெயலலிதாவின் இரு ஆண்டு ஆட்சியும் தமிழகத்தின் அரசியல் நிலையும்

இந்தியாவின் தேர்தல் வரலாற்றிலேயே இதுவரை எவரும் பெற்றிராத 'இமாலய சாதனை' என்று வர்ணிக்கப்படும் பெரும் வெற்றியைப் பெற்றவர் தமிழக முதல்வர் ஜெயலலிதா. இரண்டு ஆண்டு காலத்தைப் பூர்த்தி செய்திருக்கும் ஜெயலலிதா அரசு தனது பதவிக் காலம்வரை தொடர்ந்து ஆட்சி நடத்துமா என்ற கேள்வி தமிழகத்தில் எப்போதோ எழுந்து விட்டது. ஜெயலலிதாவின் ஆட்சியில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால் அரிசி விலை, பால் விலை, மின்சாரம் மற்றும் பேருந்து கட்டணங்களின் உயர்வு என்பவற்றின் காரணமாக மக்கள் பெரும் திண்டாட்டத்திற்கு உள்ளாகியுள்ளனர். அத்துடன் ரௌடிக் கும்பல்களின் அட்டகாசங்களும், தீர்க்கப்படாத கொலை குற்றங்களும், வழிப்பறிகளும் இன்னும் இது போன்று இடம் பெறும் சம்பவங்களும் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை கேள்விக்குரியதாகப் போய் இருக்கிறது.

இது தவிர முதல்வர் ஜெயலலிதா மீதும், அவரது அமைச்சரவை சகாக்கள் மீதும் சுமத்தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் இமயச் சிகரத்தை எட்டி நிற்கின்றன. இந்தப் பட்டியலில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் பற்றிய வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் ஜெயலலிதா அரசுக்கு பெரும் களங்கம் என்பது தெரிந்ததே. பிரம்மாண்டமான கட் அவுட்டுகளும், வண்ண வண்ண சுவரொட்டிகளும், வரவேற்பு வளைவுகளும், முழுப் பக்க அளவு விளம்பரங்களும், முதல்வர் ஜெயலலிதாவைத் தொடரும் வாகன ஊர்வலங்களும் ஜெயலலிதாவின் விளம்பர மோகத்திற்கும் ஆடம்பரப் பிரியத்திற்கும் எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

### அமைச்சரவையில் மாற்றம்:

இந்தநிலையில்தான் முதல்வர் ஜெயலலிதா கடந்தமே மாதத்தில் திடீரெனத் தமது அமைச்சரவையில் பெரும் மாற்றங்களைச் செய்தார். ''எம். ஜி. ஆர். பாணியில் தமது கட்சிப் பிரமுகர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் தரும்டொனிக்'' என்று வர்ணிக்கப்பட்டதான இம் மாற்றத்தின் மூலம் ''இடைக்கால முதல்வர்'' ஆகும் வாய்ப்பு கிட்டலாம் என்று எதிர் பார்க்கப்பட்ட கல்வி அமைச்சர் அரங்கநாயகம் தூக்கியெறியப்பட்டிருக்கிறார். ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு உரியவர் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அழகு. திருநாவுக்கரசுவின் பதவி பறிபோனது காங்கிரஸ் கட்சிக்கு நெருக்கமானவர் என்று கருதப்படும் உணவு அமைச்சர் ஜி. விசுவநாதனின் பதவியும் பிடுங்கப்பட்டது. முன்னாள் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் பதவியுடன் புதுவாழ்வு பெற்றுள்ளார். துரை. இராமசுவாமிக்கும், பதவி வழங்கப்பட்டது அமைச்சரவை மாற்றம் இத்துடன் முற்றுப் பெறவில்லை என்றும் மேலும் ஆறு புதிய அமைச்சர்களை நியமிக்கும் பட்டியல் ஒன்றை ஜெயலலிதா தன் கையில் வைத்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது அம்மா திராவிட முன்னேற்றக் கழகமாகத் திரிபுபட்டு விட்டதாக சுட்டிக்காட்டப்படும் அதேவேளையில் கட்சிக்குள் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கின்றது என்றே கூறப்படுகிறது. அதிகமாகி விட்ட அதிருப்தியாளர்களை திருப்திப்படுத்த அவர்களுக்கு அமைச்சர் பதவி அளிக்கப்பட்டதாகவும், ஜெயலலிதா அமைச்சரவையில் இடம் பெற்றவர்களில் ஐந்து பேர் காங்கிரஸ் கட்சியில் சேரத் தயாரான மனநிலையில் இருந்ததாகவும், சிலர் திருநாவுக்கரசுவின் எம். ஜி ஆர். அ. தி. மு. கவில் இணையத்தயாராக இருந்ததாகவும் மேலும் கூறப்படுகின்றது. இவ்வாறாக கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் நிலநடுக்கத்தை தவிர்க்கவே ஜெயலலிதா தனது அமைச்சரவையை விரிவாக்கினார். இத்தகைய பெரிய அமைச்சரவை (27 பேர் கொண்டது) இது வரை தமிழ் நாட்டில் இருந்தது இல்லை என்பதும், தமிழகத்திற்கு சிறிய கச்சிதமான அமைச்சரவையே பொருத்தமானது என்று கட்சிக்குள்ளேயே விபரமறிந்த சிலர் முணுமுணுக்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### கசப்புடன் நோக்கும் காங்கிரஸ்:

தமிழகத்தில் அமைச்சரவை விரிவாக்கம் பற்றி டெல்லி அவ்வளவு திருப்தியாகஇல்லை என்றே தெரிய வருகின்றது. ''திட்டங்கள் அல்லாத செலவுகளை மாநில அரசுகள் குறைத்துக் கொள்வது நல்லது'' என்று பிரதமர் நரசிம்மராவ் ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கும் அதே சமயம் ''நூற்றுக்கணக்கான கார்கள் புடைசூழ ஜெயலலிதா ஆடம்பரப் பவனி வருவதை மத்திய அரசு அறவே ரசிக்கவே இல்லை'' என்று கூறுகிறார் ஒரு காங்கிரஸ் பிரமுகர்.

மத்தியில் ''நித்திய கண்டம் பூரண ஆயுசாகத்'' தொடர்ந்து காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்துவது தெரிந்ததே. ஆட்சிக்கு வந்தது முதல் அடுத்தடுத்து பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வந்த பிரதமர் நரசிம்மராவிற்கு இப்போது ஹர்சத் மேத்தா என்ற உருவில் தலைவிடி தலையெடுத்துள்ளது. ஒரு கோடி ரூபாவை பிரதமர் நரசிம்மராவிடம் நேரில் கையளித்ததாகக் கூறியிருப்பது இந்திய உப கண்டத்தின் அரசியல் அரங்கை கலக்கி இருக்கின்றது.

மத்திய அரசு தளம்பும் இந்த நிலையிலும் கூட காங்கிரஸ்காரர்கள் தமிழக அரசை கலைத்து விட முடியும் என்று மனப்பால் குடித்த வண்ணம் உள்ளனர். தமிழகத்தில் இருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் அ.தி.மு கவிலிருந்தும் தி.மு.க விலிருந்தும் சிலரை ஈர்த்தெடுத்து திராவிட பாரம்பரிய கட்சிகளைப் பலவீனப்படுத்தி அவற்றின் மீது சவாரி செய்யவே முயல்கின்றனர் என்று உணர முடிகின்றது. ''இந்தி எதிர்ப்பு, மாநில சுயாட்சி என்பன போன்ற மாயாஜால கோஷங்களால் மட்டும் திராவிட பாரம்பரிய கட்சிகள் உயிர் வாழ முடியாது என்பதை தி.மு.கவும், அ.தி.மு.கவும் மெல்ல மெல்ல வலுவிழந்து வருவது காட்டுகின்றது.'' தமிழக காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் தி. க. கிள்ளிவளவன் கூறியிருப்பது இதனைக் காட்டுவதாகும்.

### தி.மு.கவில் பிளவு:

கழகத்தின் சட்ட திட்டங்களுக்கு புறம்பாக மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட மன்றங்கள், தலைமைக்கழகத்தால் கலைக்கப்பட்டுள்ளன இவ்வாறு கலைக்கப்பட்ட மன்றங்களில் மு.க ஸ்டாலின் நற்பணிமன்றம் வை. கோபாலசாமி தலைமை மன்றம் என்பவையும் இடம் பெற்றுள்ளன உயிரோடு இருப்பவர்களின் பெயரில் மன்றங்கள் அமைக்கப்படக்கூடாது என்ற கருணாநிதியின் அறிவிப்பு தி.மு.கவினுள் வளரும் கோபால்சாமி போன்றோரின் செல்வாக்கைத் தடுப்பதற்கே ஆகும் என்றுகூறப்படுகின்றது. எனினும் கோடிக்கணக்கில் சொத்துகளைக் கொண்டிருக்கும் தி.மு.க.வினுள் ஏற்பட்டிருக்கும் அதிகாரப்போட்டி இப்போதும் இலைமறையாக இல்லை என்பதும் தி.மு.கவினுள் பிளவு எதுவும் இல்லை என்ற கருணாநிதியின் அறிவிப்பு உண்மைக்குபுறம்பானது என்பதுப் நிச்சயம் துணைப் பொதுச்செயலாளராக விளங்கிய நாஞ்சில் மனோகரன் கட்சியின் அடிப்படை உறுப்பினர் தகுதி உட்பட அனைத்துப் பதவிகளில் இருந்தும் திடீரென தூக்கி எறியப்பட்டதும், நாஞ்சிலாருக்கு ஆதரவு தெரிவித்த மதுரைக்காரர்களின் செயற்பாடுகளும் தி.மு கவில் புகைந்து கொண்டிருந்த விடயங்களை அம்பலத்திற்கு கொண்டு வந்துள்ளன.

### திருநாவுக்கரசுவின் அறிவிப்பு:

காங்கிரஸ்காரர்கள் மட்டும் ஒத்துவந்தால் அறுபது எம். எல். ஏக்களை தூக்கிவிடலாம். சம்பாதிக்கும் லட்சியம் ஒன்றைத் தவிர வேறு சிந்தனை ஏதுமின்றி முதல்வர் ஜெயலலிதா செயற்படுகின்றார் என்று எம். ஜி. ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் திருநாவுக்கரசு பேராவூரணியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசும் போது கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்த ஆட்சியைக் கலைக்க காரணம் ஏதுமில்லை என அமைச்சர்கள் சிலர் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். ஒரு காரணமல்ல ஆயிரம் காரணம் இருக்கின்றது. எனவே, இரண்டுமாத காலத்தினுள் அரசியல் மாற்றம் வந்தே தீரும் என்றும் பகிரங்கமாக அறிவித்தார்.

எனினும் மத்தியில் காங்கிரஸ் கட்சியின் தளம்பும் நிலையும், மாநில காங்கிரஸ் கட்சியினர் தமது பலமான எதிர்க்கட்சி என்ற நிலையை விட்டுக் கொடுக்க தயாராக இல்லாத நிலையும், முதல்வர் ஜெயலலிதா நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கு போதுமானவை அல்ல.

**இளையவன்**

# இனவெறித் தாக்குதல் கனடாவில் அதிகரிப்பு

ஐ. நா பாதுகாப்பு சபையின்

## ஆதரவை பெறும்முயற்சியில் அமெரிக்காவிற்கு தோல்வி

(ஜெனிவா)

ஈராக் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐ. நா. பாதுகாப்பு சபையின்ஆதரவையும், காவிற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

பிரிட்டன் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரி

வேண்டிய ஏற்பட்டுள்ளது. பலர் படுகாயம் அடைந்து துயருற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வெடிப் பொருள்களுடன் விளையாடுவது ஆபத்தானது எனப் பல தடவை பல தரப்பில் இருந்தும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கம் இது குறித்துப் பகிரங்க எச்சரிக்கைகளும், அறிவிப்பும் வெளியிட்டு இருந்தது. பத்திரிகைகளும் இவை குறித்துச் சுட்டிக் காட்டியிருந்தன. இதே பத்திரிகையில், இதே பகுதியில் இது குறித்து எச்சரிக்கை செய்யப்பட்டும் இருந்தது.

ஆனால் இதனை அநேகர் கவனத்தில் கொண்டதாக இல்லை. கவனத்தில் கொண்டிருப்பின் இவ்வாறான துயரச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆகையினால், இவ்வாறான துயரச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இதனால் மரணமடைந்த / பாதிக்கப்பட்டவர்களின் சிந்தனையற்ற நடவடிக்கைகளும், ஏனையோரது அசட்டையுமே காரணமாகும்.

எமது மண்ணில் பல வருடங்களாக யுத்தம் தொடர்ந்து நடந்து வருவதினால் எதிரி பயன்படுத்திய வெடிக்காத ஷெல்கள், வெடிப் பொருள்கள் என்பன முற்றாக மீட்கப்படாமல் ஒரு சில பகுதிகளில் காணப்படக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. இந்நிலையில், இவ்வாறான ஷெல்கள் காணப்படும் இடத்து அதனை விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்க வேண்டியது அதனை கண்டவரது கடமையாகும், இது பலரது உயிரைப் பாதுகாக்க உதவக் கூடியதாகும். ஆனால், அது குறித்து அநேகர் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

மாறாக ஷெல், மற்றும் வெடிப்பொருள்கள் என்பவற்றைக் கண்டால், அவற்றை பாழுங் கிணற்றில் போடுதல், அல்லது கிடங்கு வெட்டி மூடிவிடுதல் போன்ற நடவடிக்கையில் சிலர் ஈடுபடுவதுண்டு. ஆனால், இது பாதுகாப்பானதொரு நடவடிக்கையல்ல. நேற்று முன் தினம் ஆனைக்கோட்டையில் ஒருவரைப் பலி கொண்டு ஐந்துபேரைப் படுகாயப் படுத்திய ஷெல்லும் பாழும் கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டதே.

இதேவேளை, ஷெல்லை பரீட்சித்துப் பார்க்கும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் குழந்தைகளும் அல்ல. சிறுவர்களும், இளைஞர்களுமே ஆகும். இவர்களுக்கு ஷெல் பற்றியோ, வெடிப்பொருள்கள் பற்றியோ முற்றுமுழுதாக ஒன்றும் தெரியாது என்பதுமல்ல. இவர்கள் பெரும் யுத்த காலத்தில் வாழ்பவர்கள். ஷெல்லின் தாக்கத்திற்கு நேரடியாக உள்ளாகாது விட்டாலும் அதன் பாதிப்பை தெளிவாக உணர்ந்தவர்கள்.

இந்நிலையில், வேண்டப்படாத இவ்விளைவுகளைத் தவிர்ப்பதில், சிறுவர்களும், இளைஞர்களும் அக்கறையாக இருக்க வேண்டும். வெடிப் பொருள்களுடன் விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும். இதேவேளை, முதியவர்களும் இது குறித்து அக்கறையாக இருக்க வேண்டும். ஷெல் போன்றவற்றைக் காணுமிடத்து அது குறித்து அசட்டையீனமாக இருக்காமல் அதனை அப்புறப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதுவே அவருக்கும், அவரது குடும்பத்திற்கும், நண்பர்களுக்கும், முழு இனத்திற்குமே பாதுகாப்பு அளிக்கக் கூடியதாகும்.

---

பயிற்சிக் கல்லூரிகள் பற்றிய வழக்கில், சென்னை உயர்நீதி மன்றம் ஜெயலலிதா அரசுக்கு பெரும் களங்கம் என்பது தெரிந்ததே. பிரம்மாண்டமான கட் அவுட்டுகளும், வண்ண வண்ண சுவரொட்டிகளும், வரவேற்பு வளைவுகளும், முழுப் பக்க அளவு விளம்பரங்களும், முதல்வர் ஜெயலலிதா வைத் தொடரும் வாகன ஊர்வலங்களும் ஜெயலலிதாவின் விளம்பர மோகத்திற்கும் ஆடம்பரப் பிரியத்திற்கும் எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

...னேற்றக் கழகம் என்பது அம்மா திராவிட முன்னேற்றக் கழகமாகத் திரிபுபட்டு விட்டதாக சுட்டிக்காட்டப்படும் அதேவேளையில் கட்சிக்குள் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கின்றது என்றே கூறப்படுகிறது. அதிகமாகிவிட்ட அதிருப்தியாளர்களை திருப்திப்படுத்த அவர்களுக்கு அமைச்சர் பதவி அளிக்கப்பட்டதாகவும், ஜெயலலிதா அமைச்சரவையில் இடம் பெற்றவர்களில் ஐந்து பேர் காங்கிரஸ் கட்சியில் சேரத் தயாரான மனநிலையில் இருந்த...

தொடர்ந்து காங்கிரஸ்காரர்களின் ஆட்சி நடத்துவது தெரிந்ததே. ஆட்சிக்கு வந்ததுமுதல் அடுத்தடுத்து பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வந்த பிரதமர் நரசிம்மராவிற்கு இப்போது ஹர்சத் மேத்தா என்ற உருவில் தலைபிடி தலையெடுத்துள்ளது. ஒரு கோடி ரூபாவை பிரதமர் நரசிம்மராவிடம் நேரில் கையளித்ததாகக் கூறியிருப்பது இந்திய உப கண்டத்தின் அரசியல் அரங்கை கலக்கி இருக்கின்றது.

மத்திய அரசு தளம்பும்...

...கள் அமைக்கப்படக்கூடாது என்ற கருணாநிதியின் அறிவிப்பு தி.மு.கவினுள் வளரும் கோபால்சாமி போன்றோரின் செல்வாக்கைத் தடுப்பதற்கே ஆகும் என்றுகூறப்படுகின்றது. எனினும் கோடிக்கணக்கில் சொத்துகளைக் கொண்டிருக்கும் தி.மு.க.வினுள் ஏற்பட்டிருக்கும் அதிகாரப்போட்டி இப்போதும் இலை மறையாக இல்லை என்பதும் தி.மு.கவினுள் பிளவு எதுவும் இல்லை என்ற கருணாநிதியின் அறிவிப்பு உண்மைக்குபுறம்பானது என்பதுப் நிச்சயம் துணைப்...

...ரஸ் கட்சியின் தளம்பும் நிலையும், மாநில காங்கிரஸ் கட்சியினர் தமது பலமான எதிர்க்கட்சி என்ற நிலையை விட்டுக் கொடுக்க தயாராக இல்லாத நிலையும், முதல்வர் ஜெயலலிதா நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கு போதுமானவையல்ல.

## இளையவன்

---

# இனவெறித் தாக்குதல் கனடாவில் அதிகரிப்பு

(ஒட்டாவா)

கனடாவில் வெளிநாட்டவர்கள் மீதான இனவெறித் தாக்குதல்கள் அதிகரித்து வருவதாகவும், இச் சம்பவங்களில் சிக்கி இலங்கையர்கள் சிலரும் காயமடைந்து இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கனடாவிலிருந்து வெளியிடப்படும் ''ரொறொன்ரோ ஸ்டார்'' கடந்த 9 ஆம் திகதிய வெளியீட்டில் மேலும் இலங்கையைச் சேர்ந்த குணாளன் முத்துலிங்கம், சிவராஜா வினாசித்தம்பி ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இத்தகைய இனவெறிச் சம்பவங்கள் எண்பதுக்கும் அதிகமாக இடம்பெற்றிருப்பதாகவும், இச் சம்பவங்கள் குறித்து ஒட்டாவா பொலிசார் விசாரணை நடத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது.

சட்டவிரோத குடியேற்றத்திற்காக

## ஜேர்மனிக்கு தமிழர்களை கடத்திச் சென்றோர் கைது

(ஜேர்மன்)

இரண்டாயிரம் தமிழர்களை ஜேர்மனிக்கு களவாகக் கடத்திக் குடியேற்றிய கடத்தல் கோஷ்டி ஒன்றை சேர்ந்த ஒன்பது பேரை துப்பறியும் நிபுணர்கள் கைதுசெய்துள்ளனர்.

ஜேர்மனிக்கு களவாகக் குடியேறியுள்ள இரண்டாயிரம் தமிழர்களை கடத்தியதன் மூலம் இக் கோஷ்டி சுமார் அறுபது இலட்சம் டாலர்களை சம்பாதித்துள்ளதாக தெரிய வருவதாக துப்பறியும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இத் துப்பறியும் நிபுணர்கள் கருத்து தெரிவிக்கையில், இருபதுபேரைக் கொண்ட இக்குழு சிறுசிறு குழுவாக மாஸ்கோவிலிருந்து பிராகிக்கு களவாக கடத்தி வந்த பின்னர் செக்கோசெலவோக்கியா ஜேர்மனி எல்லை வழியாக ஜேர்மனிக்குகடத்திக்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

## ஐ.நா. அமைதிப் படையிடம் சரண் அடைய போவதில்லை

—அய்டீட்

(மொகாடிஷ்)

பாகிஸ்தானிய இராணுவத்தைச் சேர்ந்த 23 பேர் கொல்லப்பட்ட விடயத்தில் தாம் ஓர் அப்பாவி என்றும், எனவே தான் ஐ. நா. அமைதிப் படையிடம் சரணடையப் போவதில்லை என்றும், சோமாலியாவின் கிளர்ச்சித் தலைவர் மொகமட் பாரா அய்டீட் கூறியுள்ளார்.

மொகாடிஷிவில் இருக்கும் ஒரு வீட்டிலிருந்து என்.பி.சி. தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில். எதற்காக நான் சரணாகதி அடைய வேண்டும்? நான் குற்றவாளியே அல்ல, கொலை செய்தவர்களும், சோமாலிய மக்களின் சொத்துக்களை அழித்தவர்களுமே கைதுசெய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

ஐ. நா. துருப்புக்கள் உங்களைக் கைது செய்தால் என்ன நடக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள் என்ற நிருபரின் கேள்விக்கு பதிலளித்தஅய்டீட் எனது மக்கள் என்னைப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு எனத் தெரிவித்தார்.

## பாக்தாத் மீதான தாக்குதல் அரபுநாடுகள் கண்டனம்

(கெய்ரோ)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் முன் அனுமதியைப் பெறாமல் இத்தகைய தாக்குதல் நடத்தப்படுவது முற்றிலும் தவறானதாகும் என்று எகிப்திய வெளிநாட்டு அமைச்சர் மூசா கூறியுள்ளார்.

பாக்தாத் மீது அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதல் தொடர்பாக கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பொஸ்னியாவில் சேர்பியப் படைகள் சகல சர்வதேச சட்டங்களுக்கும் மாறாக தாக்குதல் நடத்தி வருகின்றன. அந்த விடயத்தில் கடும் நடவடிக்கை எடுக்க அமெரிக்கா தவறியுள்ளது. எனவே அமெரிக்காவும் மேற்கு நாடுகளும், உலக விவகாரங்களில் கடைப்பிடிக்கும் இரு வேறு விதமான கொள்கைகளுக்கு ஈராக் மீதான தாக்குதல் நல்ல எடுத்துக்காட்டு ஆகும் எனவும் தெரிவித்தார்.

பாக்தாத் மீதான அமெரிக்காவின் தாக்குதலை வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்காவிற்கு ஆதரவுதெரிவித்த பல அரபு நாடுகளும் கூட கண்டித்து இருக்கின்றன. எனினும் குவைத் மட்டும் அமெரிக்காவின் தாக்குதலை பகிரங்கமாக ஆதரித்துள்ளது.

ஐ. நா பாதுகாப்பு சபையின்

## ஆதரவை பெறும்முயற்சியில் அமெரிக்காவிற்கு தோல்வி

(ஜெனிவா)

ஈராக் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐ. நா. பாதுகாப்பு சபையின்ஆதரவையும், அங்கீகாரத்தையும் பெறும் முயற்சியில் அமெரிக்கா தோல்வியடைந்துள்ளது. எனினும் சபையின் அவசர கூட்டம் இத்தப்பிரச்சினை குறித்து எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றாமலேயே கலைந்துவிட்டது.

நேற்று முன்தினம் இந்தத் தாக்குதல் தொடர்பாக விவாதிக்கக் கூட்டப்பட்ட ஐ நா. பாதுகாப்பு சபையின் விசேட கூட்டத்தில் சீனா வெளிப்படையாக அமெரிக்காவை கண்டித்தது. பிரான்ஸ், பிரேசில் மற்றும் ஐந்து மண்டல சார்பற்ற நாடுகளும், அமெரிக்காவிற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

பிரிட்டன் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்ததுடன், அமெரிக்காவின் தாக்குதலை நியாயப்படுத்தவும் முற்பட்டது.

இதனிடையே ஈராக் பதில் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அமெரிக்காகருதுவதால் துருப்புகள் மற்றும் ஆயுதங்களின் நடமாட்டம் கண்காணிக்கப்படுவதாகவும், கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து விமானந்தாங்கி கப்பலொன்று வளைகுடாவிற்கு ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## தனிநாடு அமைப்பதற்கு ராஜீவ் இணங்கி இருந்தார்

வழக்கு விசாரணையில் சட்டத்தரணி

(சென்னை)

தமிழர்களுக்கான தனி நாட்டை இலங்கையில் அமைப்பது தொடர்பாக ராஜீவ் காந்திக்கும், புலிகள் இயக்கத்திற்கும் இடையே இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டிருந்தது என்று ராஜீவ் காந்தி கொலை தொடர்பான வழக்கில் ஆஜராகும் சட்டத்தரணிகளில் ஒருவரான ராம்தாஸ் நீதி மன்றத்தில் தெரிவித்தார்.

பூந்த மல்லியில் விசேட நீதி மன்றத்தின் முன்பாக கடந்த வியாழனன்று தனது விவாதத்தை ஆரம்பித்த திரு. ராம்தாஸ் மேலும் கூறுகையில், தான் மீண்டும் பதவிக்கு வந்தால் தமிழீழம் அமைக்கப் படுவதற்கு அநேகமாக இணக்கம் தெரிவிப்பதாக, பிரபாகரனின் தூதுவர்களுடனான சந்திப்பின் போது ராஜீவ் காந்தி கூறியிருந்தார் இதனை இந்திய மத்திய புலனாய்வுக் கழகத்தின்விசேடவிசாரணைக் குழுவுக்கு அளித்த சாட்சியத்தில் சில அரசு தரப்பு சாட்சிகள் கூறியுள்ளனர் எனவும் சுட்டிக் காட்டினரர்.

## கௌரவத்தை இழந்து வெளிஉதவி பெறமாட்டோம்

— நரசிம்மராவ்

நாட்டின் கௌரவத்தை விட்டுக்கொடுத்து அதன்மூலம் வெளிநாட்டு உதவி எவ்வளவு கிடைப்பதாக இருந்தாலும் அரசாங்கம் அதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது என்று இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் போபாலின் லால்பரேட் மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; இதுநாள் வரையிலான நமது நாட்டின் மோசமான பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு நிதி உதவி அளிக்கத் தயங்கிய வெளிநாட்டு ஏஜென்சிகள், இப்போது உதவத் தயாராக காத்து நிற்பதாகவும் குறிப்பிட்டார்.

ஈராக் மீதான தாக்குதல்

# பாதுகாப்புச்சபையின் அங்கீகாரம் இல்லை

(வாஷிங்டன்)

ஈராக் மீது நடத்திய தாக்குதல் தொடர்பாக ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அங்கிகாரத்தையும், ஆதரவையும் பெறும் முயற்சியில் அமெரிக்கா தோற்றுவிட்டது. சபையின் அவசரக் கூட்டம் இந்த விடயம் தொடர்பாக எந்த வித தீர்மானத்தையும் நிறைவேற்றாமல் முடிந்துவிட்டது.

சீனா இத்தாக்குதலை வெளிப்படையாக கண்டித்தது. பிரான்ஸ், பிரேசில் மற்றும் ஐந்து அணிசேரா நாடுகளும் அமெரிக்காவின் தாக்குதலை கண்டித்தன. பிரிட்டன் தாக்குதலை வரவேற்றதுடன் அமெரிக்காவின் நடவடிக்கை நியாயமானது, தேவையானது எனக் கூறியது.

பாதுகாப்புச் சபையின் அவசர கூட்டத்தில் புஷ்ஷை கொல்ல ஈராக் சதி செய்தது என்ற தனது குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமான சான்றுகள் எனக் கூறி அமெரிக்க பிரதிநிதிகள் சிலவற்றை சமர்ப்பித்தனர்.

## ஈராக்கின் பதிலடி குறித்து அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஈராக்மீது அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக ஈராக் தாக்குதலை தொடுக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் குறித்தும் ஈராக்படை நடவடிக்கை குறித்தும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

முன்னெச்சரிக்கையாக கிழக்கு மத்திய தரைக்கடலில் இருந்து விமானந்தாங்கி கப்பல் ஒன்று வளைகுடா நோக்கி விரைந்துள்ளது.

தமிழ்நாட்டில்

## அகதிகள் மீது கட்டுப்பாடு பிரிட்டிஷ் அமைப்பு கண்டனம்

[லண்டன்]

தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகள் மீது தமிழக அரசு புதிதாக கட்டுப்பாடுகளை விதித்தமையை லண்டனில் உள்ள பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸில் கண்டித்துள்ளது. கண்டனக் கடிதம் முதலமைச்சர் ஜெயலலிதா, தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கடிதங்களில் லண்டனில் உள்ள கிறிஸ்டியன் எய்ட், சுவிசில் உள்ள வேல்ட் கவுன்சில் ஒப் சேர்சர்ஸ், இத்தாலி சாரிட்டி இன்டநஷனல், இந்திய ஜேஸ்வீட் அகதிகள் சேவை நிலையம், டச் இன்ரர் சேச் எய்ட் ஆகிய அமைப்புகளின் தலைவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

### ஐ. நா.

கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. காசிம் யூர்க்கான், பாதுகாப்பு அதிகாரி பீற்றர் நிக்கிலஸ் ஆகியோரே இன்று யாழ். வரவுள்ளனர்.

இவர்கள் பூநகரிப் பாதையூடாக உணவு வாகனப் போக்குவரத்துக்கான நடைமுறை குறித்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த உள்ளனர்.

### மன்னாரில்

- ★ சிஃசற்-75ரக கைத் துப்பாக்கி — 01
- ★ இதன் ரவைக்கூடு — 01
- ★ மொபைல் செற் — 01
- ★ நடுத்தர ரவைகள் — 30
- ★ 9எம்.எம் ரக ரவைகள் — 10

இத்தாக்குதலை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒருவர் சப் இன்ஸ்பெக்டர் என அறிவித்

### கிழக்கில்

நீதனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுகொண்டிருந்தபோது அப்பகுதியை அண்டிய பகுதியில் இரண்டு தடவைகள் உலங்குவானூர்தி இறங்கி ஏறிச்சென்றது இம்மோதலின்போது இராணுவத்தரப்பில் பலர் காயமடைந்தனர் எனவும் தெரியவருகிறது.

இம்மோதலில்

★ மேஜர் நளன்/ஏகாம்பரராஜ் (சரவணை விஜயகுமார், கொம்மாந்துறை, செங்கலடி)

★ லெப்டினன்ட் கபில்ராஜ் (கோவிந்தபிள்ளை அரியரட்ணம், 17-ம் வட்டாரம், குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி)

★ 2-ம் லெப்டினன்ட் ஸ்ரீபரதன் (ரட்ணம் ஜோசேந்திரன், நாகபுரம் மகிளுர், களுவாஞ்சிக்குடி)

★ லெப்டினன்ட் மைக்கல் ராஜ்/கலைஞன் (கணபதிப்பிள்ளை சாம்பசிவம். நாவலடி மட்டக்களப்பு)

### தலைவர்

தானோ அல்லது தமது அமைச்சரவை சகாக்கள் எவருமோ தலைவர் பிரபாகரனைச் சந்தித்தது கூட இல்லை என்றும் தெரிவித்தார்.

தலைவர் பிரபாகரனைச் சில தடவைகளில் சந்தித்ததாக கூறிய பத்திரிகையாளர் ஒருவர் "அவர் நியாயமற்றவராகத் தெரியவில்லையே" எனக் குறிப்பிட்டபோது பிரதமர் ரணில் அவரை நாம் சந்தித்ததில்லைஎன்றும், அவரது தேவை என்ன என்பது பற்றி அறிய முடியாதிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதில் காலவரம்பு ஏதேனும் கொண்டிருக்கிறீர்களா என கேட்கப்பட்டபோது முடியுமானால் நாளை கூட தீர்வைக்காண நாம் விரும்புகின்றோம் என்றார் பிரதமர். ஜனநாயக முறையின் கீழ் விடுதலைப் புலிகள் தமது கோரிக்கைகள் குறித்து அரசுடன் பேச்சுநடத்த பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும் எனக் குறிப்பிட்ட அவர். ஏனைய கட்சிகளுடன் தேர்தலில் போட்டியிட விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும் என்றும் தெரிவித்தார். பிரச்சினைக்கு

அரசியல்தீர்வு காணும்முயற்சியை அரசாங்கம்கைவிட்டுவிடவில்லை. விடுதலைப்புலிகளை பேச்சுக்கு வரச் செய்வதற்கு அவர்களின் கெரில்லா போரை கைவிடச் செய்ய இராணுவ நடவடிக்கை அவசியமாகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மீது அரசு பொருளாதாரத் தடையை விதித்துள்ளதாக கூறப்படுவதை மறுத்த பிரதமர்ரணில் பற்றரிபோன்ற சில பொருள்களே தடைசெய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். விடுதலைப் புலிகளின் நெருக்கடியை சமாளிக்க இந்திய, இஸ்ரேலிய உதவியை சிறிலங்காபெற முயற்சிக்கிறது என வெளியான செய்திகளையும் அவர் முற்றாகமறுத்தார்

## வீரவணக்க கூட்டம்

(வடமராட்சி)

கடற்புலிகளின் வடமராட்சி வடக்குவட்டத்தில் மே, ஜூன் மாதங்களில் வீரச்சாவெய்திய 51 மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று பருத்தித்துறை மூனை பாடசாலை மைதானத்தில் இரவு 7-30 மணிக்கு இடம்பெறும்.

விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் நினைவுப்பேருரையும் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (யோ)

### இளாலி

இராணுவ முகாமை அண்டிய பகுதிகளில் நேற்று நண்பகலில் இருந்து ஷெல் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன (86)

### கைதிகள்

த்து வருவதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு சிறிலங்கா அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளதாகவும் அவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## மன்னார் பயணிகள் மீது வவுனியாவில் கெடுபிடி

(வவுனியா)

வவுனியாவிலிருந்து மன்னார் செல்லும் பயணிகள் பம்பைமடு வீதியினூடாகவே செல்ல வேண்டும் என வவுனியா தடைமுகாமிலுள்ள இராணுவத்தினர் வற்புறுத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் காலை வவுனியா தடை முகாமிலிருந்து மன்னார் செல்ல விரும்பிய பயணிகளை பலாத்காரமாக பஸ்சில் ஏற்றிய சிறிலங்கா இராணுவத்தினர் அவர்களை பம்மைமடுவில் இறக்கிவிட்டுள்ளனர். இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தமது குடும்பத்தினரை பிரிந்து பரிதவிக்கும் நிலை ஏற்பட்டது

### கொடுப்பனவு

இன்று செவ்வாய்க்கிழமை காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்கட்கு வைகாசி மாதத்திற்கான சம்பளக் கொடுப்பனவு நாவலர் வீதியிலுள்ள தற்காலிக காரியாலயத்தில் வழங்கப்படும் எனத் தெரியவருகிறது.

## இன்று

கைலாய வாகனம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலில் இன்று மாலை கைலாயவாகன உற்சவம் நிகழவுள்ளது. சிறப்பு நிகழ்ச்சியாக எஸ். எஸ். சிதம்பரநாதன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் அதனை அடுத்து சிற்பாசாரியார் சிவரத்தினம் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படும் வைபவமும் இடம் பெறவுள்ளது.

# முற்றுகை முறியடிப்பில் ஐந்து புலிகள் வீரச்சாவு



மேஜர் நளன் (ஏகாம்பரராஜ்)



லெப். கபில்ராஜ்



லெப். மைக்கல்ராஜ் (கலைஞன்)



2-ம் லெப். ஸ்ரீபரதன்

மட்டக்களப்பு மாவில் கங்கையில் 27-06-1993 அன்று விடுதலைப்புலிகளின் முகாமை சுற்றிவளைக்க முயன்ற இராணுவத்தினரின் முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். இதன் போது 5 விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



2-ம லெப். சுரேஸ்

## மனங்களில் நிலைத்த அழகன்



## முதலாண்டு நினைவு அஞ்சலி

லஸ் ஆகியோரே இன்று யாழ். வரவுள்ளனர்.

இவர்கள் பூநகரிப் பாதையூடாக உணவு வாகனப் போக்குவரத்துக்கான நடைமுறை குறித்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த உள்ளனர்.

## மன்னாரில்

- ★ சி:சற்-75ரக கைத் துப்பாக்கி — 01
- ★ இதன் ரவைக்கூடு — 01
- ★ மொபைல் செற் — 01
- ★ நடுத்தர ரவைகள் — 30
- ★ 9எம்.எம் ரக ரவைகள் — 10

இத்தாக்குதலை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட ஒருவர் சப் இன்ஸ்பெக்டர் என அறிவித்துள்ளன.

## புதிய

அனுப்பி வைப்பதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரினர்''. இவ்வாறு புலிகளின் பேச்சாளர் ஈழநாதத்திற்கு எடுத்து விளக்கினார்.

''தடை நீங்கிய பொருள்களை ஒரு குறிப்பிட்ட அளவில்தானும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க அரசு தரப்பு விரும்பவில்லை. இது குறித்து இராணுவத்தினர் மத்தியில் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளதாகவும் பிரிகேடியர் எமக்குக் கூறினார். ஆகவே புலிகள் மீது பொய்க்குற்றச் சாட்டை சுமத்தி தடைநீக்கம் செய்யப்பட்ட பொருள்களை இங்கு அனுப்பாமல் விடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. உடன்பாடுகளை செய்வதும், மீறுவதும் சிங்கள ஆட்சியாளர் கையாண்டுவரும் தந்திரோபாயமாகும் என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.'' எனவும் தெரிவித்தார்.

பகுதியை அண்டிய பகுதியில் இரண்டு தடவைகள் உலங்கு வானூர்தி இறங்கி ஏறிச் சென்றது இம் மோதலின்போது இராணுவத் தரப்பில் பலர் காயமடைந்தனர் எனவும் தெரியவருகிறது.

இம்மோதலில்

★ மேஜர் நளன்/ஏகாம்பரராஜ் (சரவணை விஜயகுமார், கொம்மாந்துறை, செங்கலடி)

★ லெப்டினன்ட் கபில்ராஜ் (கோவிந்தபிள்ளை அரியரட்ணம், 17-ம் வட்டாரம், குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி)

★ 2-ம் லெப்டினன்ட் ஸ்ரீபரதன் (ரட்ணம் ஜோசேந்திரன், நாகபுரம் மகிளூர், களுவாஞ்சிக்குடி)

★ லெப்டினன்ட் மைக்கல் ராஜ்/கலைஞன் (கணபதிப்பிள்ளை சாம்பசிவம். நாவலடி மட்டக்களப்பு)

★ 2-ம்லெப்டினன்ட்சுரேஸ்/அமரகாசன் (அந்தோனி மரியதாஸ் 15-ம் கொலனி நாவிதன் வெளி, மட்டக்களப்பு)

ஆகியோரே வீரச்சாவடைந்தவர்கள் ஆவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.


BECON - யாழ்ப்பாணம்

O/L

DAY CLASS 1993 DEC.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

1. 7. 93

8. 00 am

யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் சேவை

(சி-6915)


தலைப் புலிகள் தமது கோரிக்கைகள் குறித்து அரசுடன் பேச்சுநடத்த பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும் எனக் குறிப்பிட்ட அவர், ஏனைய கட்சிகளுடன் தேர்தலில் போட்டியிட விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும் என்றும் தெரிவித்தார். பிரச்சினைக்கு

பிரதமர் ரணில் பற்றறிபோன்ற சில பொருள்களே தடைசெய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். விடுதலைப் புலிகளின் நெருக்கடியை சமாளிக்க இந்திய, இஸ்ரேலிய உதவியை சிறிலங்காபெற முயற்சிக்கிறது என வெளியான செய்திகளையும் அவர் முற்றாகமறுத்தார்



2-ம் லெப். ஸ்ரீபரதன்

மட்டக்களப்பு மாவில் கங்கையில் 27-06-1993 அன்று விடுதலைப்புலிகளின் முகாமை சுற்றிவளைக்க முயன்ற இராணுவத்தினரின் முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். இதன்போது 5 விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



2-ம லெப். சுரேஸ்

## மனங்களில் நிலைத்த அழகன்



### மேஜர் அழகன்


[செல்வராசா இளங்கோ]

ஆண்டு ஒன்றல்ல
பல ஆண்டுகள் சென்றாலும்
எம் மனங்களில் நீங்காத அழகன்.

(சி/6917) — நண்பர்கள்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 07 | 07 | 1973



வீரச்சாவு: 09 | 07 | 1992

### கப்டன் ஈழவேந்தன் (சுப்ரா)

(பாலசுந்தரம் சதீஸ்)

திதி : 29-06-1993

மண்மீட்புப் போரிலே - உன் மாவீரம் தெரிந்ததடா
கண்மூடித் தூங்குகின்றாய் - நல்ல
காரியம் செய்துவிட்ட காரணத்தால்
மண் உள்ளவரை - உன் மாவீரம் மறையாதையா

மயிலிட்டி வடக்கு,
காங்கேசன்துறை. (5240) குடும்பத்தினர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 28-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10114

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:


இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-5517, 41-2509, 28-8589, 26-4139, 27-9327
28-1992, 41-9396, 27-9764, 24-8484, 27-5912
28-4672, 26-7949, 42-9220, 28-1062, 41-9530
26-4657, 28-1049, 26-7286, 27-2107, 41-1799
40-2249, 24-4350, 27-8125, 26-4376.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## முதலாண்டு நினைவு அஞ்சலி



# மேஜர் அழகன்

### (செல்வராசா இளங்கோ)

[ஈழநாதம் முன்னாள் நிர்வாகப் பொறுப்பாளர்]

மாதா மடியில்: **1966-01-13**

மண்ணின் மடியில்: **1992-06-29**

காலங்கள் கடந்தாலும்
எம் இதயத்தில் நீ பதித்த
கோலங்கள் மறையாது எம் மகனே!

நின் ஆத்ம சாந்திக்காக அனுதினமும் அஞ்சலிப்போம்.

இன்று எம் இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு ஈழநாதத்தைச் சேர்ந்தவர்கள், போராளிகள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்வயல்,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.